Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 08 விலை ரூபா 5-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Weekly வெள்ளி மஞ்சரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி 28 (12 - 07 - 1991) வெள்ளிக்கிழமை ஓசை: 144

## மினிக் கச்சேரிகளாக உ. அ. அ. காரியாலயம்

(கொழும்பு)

நிர்வாகப் பரவலாக்கல் அமைப்பின்கீழ் இனி மேல் உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்கள் மினிக் கச்சேரிகளாக செயற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை செயற்படுத்துவதற்கு உதவி அரச பணிமனையில் மேலதிக அரசாங்க அதிபர் ஒருவரும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளிடம் விழும் நிலையில் மேலும் பல காவலரண்கள்

## தொடர்ந்தும் கடும் மோதல்

(ஆனையிறவு)

ஆனையிறவு இராணுவ முகாம் மீது நேற்றும் இரண்டாவது நாளாக விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இத் தாக்குதலினால் மேலும் பல காவல் அரண் புலிகளின் வசம் வீழும் நிலையில் உள்ளதாகவும் தெரியவருகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் தொடுத்த தாக்குதலைத் தொடர்ந்து அப் பகுதியில் கடும் மோதல் இடம்பெற்று வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இத் தாக்குதல் பற்றிச் செய்தியாளர்களிடம் பேசிய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஏயர் சீப் மார்ஷல் வால்டர் பெர்னாண்டோ விடுதலைப் புலிகள் முன் எப்பொழுதும் இல்லாத வகையில் ஆனையிறவு முகாமை நோக்கிக் கடும் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவித்தார்.

## உப்பள உல்லாச விடுதி வீழ்ச்சி

(ஆனையிறவு)

ஆனையிறவு இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் தாக்கத் தொடங்கிய இரண்டாம் நாள் இரவான புதன்கிழமை இரவு முகாமின் ஒருபகுதி புலிகளிடம் வீழ்ச்சி அடைந்தது. ஆனையிறவு உப்பளப் பகுதியிலிருந்த இராணுவ முகாமின் உல்லாசப் பயணிகள் விடுதியே முதலில் வீழ்ச்சியடைந்த இப்பகுதியாகும்.

நேற்றுமுன்தினம் அதிகாலை இராணுவ முகாம் மீது பீரங்கித் தாக்குதலை ஆரம்பித்த விடுதலைப் புலிகள் நேற்றிரவு

(8ஆம் பக்கம் பார்க்க)

## மேஜர் உட்பட 20 படை பலி

(ஆனையிறவு)

ஆனையிறவுப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் ஒரு மேஜர் உட்பட இருபதிற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் இருபத்தைந்து இராணுவத்திற்கு மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளதாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்திகள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 2 உலங்குவானூர்திகள் சேதம்

(ஆனையிறவு)

ஆனையிறவு முகாம் பகுதியில் விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது தாக்குதல் நடத்திய இரண்டு உலங்குவானூர்திகள் புலிகளின் எதிர்த் தாக்குதலுக்குள்ளாகிச் சேதமடைந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை தொடர்ந்தும் ஆனையிறவு முகாமைச் சூழவுள்ள பகுதியில் சிறிலங்கா விமானப்படை விமானங்கள் தாக்குதல

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தரை இறங்க முடியவில்லை

(கொழும்பு)

ஆனையிறவு முகாமினுள் காயமடைந்தோரை அப்புறப்படுத்த முடியாத நிலை இருப்பதாக கொழும்புப் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர். ஹெலிகொப்டர்கள் எதுவும் ஆனையிறவு முகாமினுள் இறக்க முடியாத நிலையில் இருப்பதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

எனினும் ஆனையிறவு இராணுவமுகாம் புலிகளிடம் வீழ்ச்சியடையும் எனத் தாம் நம்பவில்லையெனவும் கரும்புலித் தாக்குதல் எதுவும் இதுவரை இடம்பெறவில்லையெனவும் அவ்வாறான தாக்குதல் இடம்பெற்றால் பாதுகாப்புப் படையினர் முறியடிக்கக்கூடும் எனவும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

## வீதியில் நடமாட்டத்தைக் குறைக்க வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

அனாவசியமான உயிரிழப்புக்களைத் தவிர்க்கும் பொருட்டு கண்டி வீதி, வைத்தியசாலை வீதிகளில் மக்கள் தமது நடமாட்டத்தைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் மாலை 6 மணிக்குப் பின் வீடுகளை விட்டு வெளியேற வேண்டாம் எனவும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைமைச் செயலகம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்குமிடையே ஆனையிறவில் தொடர்ந்து கடுமோதல் நடைபெறுகிறது. இவ் வேளையில் தேவையற்ற உயிரிழப்புக்களைத் தவிர்க்கும் பொருட்டு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது.

## போராளிகள் தரப்பிலும் பலர் வீரமரணம்

(ஆனையிறவு)

ஆனையிறவு உப்பள உல்லாசப் பயணிகள் விடுதி முகாம் மீதான தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பிலும் பல போராளிகள் வீரமரணமடைந்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இத்தாக்குதலில் வீரமரணமடைந்தோரில் 2 ஆம் லெப். சுதன் (செபமாலை யேசுதாஸ் வட்டக்கண்டல் மன்னார்) லோ (இன்னத்தம்பி அமிர்தலிங்கம் ஒட்டுசுட்டான்) ரமேஷ் (தம்பித்துரை முத்துக்குமார் இருவிளான் இளவாலை ஆகியோரும் அடங்குவர்.

## உல்லாச விடுதியில் ஆயுதங்கள் மீட்பு

(ஆனையிறவு)

உப்பளம் உல்லாசப்பயணிகள் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது விடுதலைப் புலிகளினால் பல ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

மீட்கப்பட்ட ஆயுதங்களில் துப்பாக்கிகள், ரவைகள், கைக்குண்டுகள், எறிகணை என்பன உள்ளடங்குவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனால் முழுமையான எண்ணிக்கை விபரம் தெரியவரவில்லை.

## தென்மராட்சி மீது நள்ளிரவு எறிகணை தாக்கு

(யாழ்ப்பாணம்)

பலாலி விமானப்படைத் தளத்திலிருந்து தென்மராட்சிப் பகுதி நோக்கி கடுமையான எறிகணைத்தாக்குதல் மிகக் குறுகிய நேரத்தில் இடம்பெற்றது.

நள்ளிரவு சுமார் இருபது நிமிடங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்ற இந்த எறிகணை தாக்குதல்கள் குடிசனம் செறிவாக வாழும் பகுதிகளை அண்டியதாகவே இருந்தது. சாவகச்சேரிப்பகுதியும் கொடிகாமப் பகுதியும் நள்ளிரவு

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஒத்துழைக்க தயாராகுங்கள்

(நமது நிருபர்)

ஆனையிறவு மோதலை எதிர்பார்த்து எல்லோருமே காத்திருந்தது எமக்குத் தெரியும் இந்த மோதலில் மக்கள் எங்களுடன் ஒத்துழைக்க வேண்டும் என்று நேற்று புலிகளின் குரல் வானொலியில் உரையாற்றிய விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் யோகி தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும்

(8ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதலுக்குப் பயந்து கடலில் குதித்த மூவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

பொம்பர்கள் சுற்றிப் பறப்பதைக்கண்டு அதன் தாக்குதலிலிருந்து தப்பிக்கொள்ளும் நோக்குடன் கடலில் குதித்த எட்டுப்பேரில் மூவர் மரணமானார்கள்.

நேற்று பிற்பகல் 2.30மணியளவில் சங்குப்பிட்டியில் யாழ்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சீருடையில் வருவோர் மலையகத்தில் கொள்ளை

- செல்லச்சாமி

(கொழும்பு)

மலையக தோட்டப்பகுதிகளில் இராணுவ சீருடையில் வருபவர்கள் அங்கு கொள்ளையிடுகின்றனர் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எம். எஸ். செல்லச்சாமி சிறிலங்காப் பிரதமரிடம் புகார் செய்துள்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**தவறி விட்டது**

தம்பகாமம் பளையைச்சேர்ந்த தம்பு நிர்மலா என்பவருடைய அடையாளஅட்டை இல 708182060V சாவகச்சேரியில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் ஜெகோவாவின்ராஜ்ய மண்டபத்தில் ஒப்படைக்கவும்
(B-2798)

**விழுதுகள்...**

மேற்கொள்ள வேண்டியிருந்தது

முகாமினுள் நுழைந்த முகம் குழுவினுள் ஒருத்தனாகவும் இருந்தான். இவனே கூடச் சென்ற கமலும், வின்சனும் மரணித்தனர். இவனது கண்ணிலும் ஏதோ ஒரு சிதறல் பறந்து வந்து இவனது பார்வையில் பாதிப்பு ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து வைத்தியத்திற்காக இந்தியா சென்றான் இந்திய இராணுவத்தினருடனான மோதல் தொடங்கியதும் இவனுக்கு தான் ஒரு நோயாளி என்பதை விட போராளி என்ற உணர்வே தலைதூக்கியது. பூரணமாகக் குணமாகாத கண்ணுடன் தமிழீழத்தை வந்தடைந்தான்.

இந்திய இராணுவத்தினருடனான மோதல்களில் இவன் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் உளவுப் பிரிவின் பொறுப்பும் இவனிடம் ஒப்
(7 ஆம்பக்கம் பார்க்க)

---

உ

## திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் பிரசோற்பத்தி வருஷம் ஆனி மாதம் 28ஆம் திகதி (12-07-91) வெள்ளிக்கிழமை இன்று பி. ப 12-03 மணி தொடக்கம் பி ப 1-15 மணிவரை உள்ள சுபமுகூர்த்த வேளையில் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியிலுள்ள 337ஆம் இலக்க கட்டடத்தின் முதலாம் மாடியில்

### கலக்சி புகைப்பட சேவை

என்னும் புதிய ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடாத்த நிச்சயித்து இருப்பதால் அத்தருணம் நண்பர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் சமூகம் தந்து ஆதரவு நல்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றேன்.

நன்றி

இல.3, அன்னசத்திர ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை விரும்பும்
சி சிவபாலன்

(R/1537)

---

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

## யாழ். கிளைக் கூட்டம்

மேற்படி கூட்டம் 13-07-91 சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பிரதான வீதியில் உள்ள பிறிமியர் பேக்கரியில் நடைபெறும்.

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குட்பட்ட பேக்கரி உரிமையாளர்கள் அனைவரையும் தவறாது பங்குகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

இங்ஙனம்
-செயலாளர்

(R/ 1538)

---

## உதவி வைத்திய உத்தியோகத்தர்களை ஆறுமாத கால உள்ளக பயிற்சியில் ஈடுபடுத்தல்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் மார்ச் - ஏப்பிரல் 90 இறுதிப் பரீட்சையில் சித்தியெய்திய பின்வரும் உதவி வைத்திய உத்தியோகத்தர்கள் 15-07-91 தொடக்கம் 6மாத காலத்திற்கு எனது பிராந்தியத்தில் உள்ளகபயிற்சியில் ஈடுபடுத்தப்படவுள்ளார்கள் இவர்கள் 15-07-91ற்கு முன்னராக எனது பணிமனைக்கு சமூகமளிக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.

பெயர்

1) செல்வி அலெக்ஸாண்டர் காமெல் சகிலா
2) செல்வி தர்மலிங்கம் ஜீவன்ஜாவா
3) செல்வி சிவராசலிங்கம் குமுதினி
4) செல்வி சோமலிங்கம் மங்கையற்கரசி
5) செல்வி கோபாலபிள்ளை மாலினி
6) செல்வி சுவாம்பிள்ளை மரீனா பிரேமினிதேவி
7) செல்வி துரைசிங்கம் பிறேமாதேவி
8) செல்வி கணபதிப்பிள்ளை பத்மநந்தினி
9) செல்வி நடராஜா ராஜலெட்சுமி
10) செல்வி ரட்ணம் சுமதி
11) செல்வி சிவபாலன் வள்ளிராணி
12) செல்வி ஐயாத்துரை பூவதி
13) திரு. சின்னத்துரை நவரத்தினராஜா

டாக்டர் ந. கனகசபை
சுகாதார சேவைகள்
பிராந்திய பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

59, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.

(B-2800

---

# நினைவு கூருகின்றோம்...



**1991-07-12**

2ஆம் லெப்.
டெனிஸ்/அனுரா

1986 ஆம் ஆண்டு தமிழீழ கடற்பரப்பில் (மன்னார் - விடத்தல்தீவு) படகில் பயணம் செய்கையில் சிறிலங்காப் படைகளின் உலங்கு வானூர்தியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட பலதமிழர்கள்.

1987 ஆம் ஆண்டு வீரமரணமெய்திய

❋ **ஜெயா** (ராமச்சந்திரன் ஜெயசுந்தரம் - பெரியபுலுமலை)

அம்பாறை - ஒலுவில் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

**கப்டன் நகுலன்** (இளையதம்பி அருளானந்தம் - கொக்குவில் 03)

**சந்திரன்** (இ. சந்திரன் - அக்கரைப்பற்று)

வல்வெட்டித்துறையில் வீரமரணமெய்திய

**சுந்தர்** (நாகராசா தியாகசீலன் - முல்லைத்தீவு)

பருத்தித்துறையில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

**அல்வின்** (அமிர்தலிங்கம் சற்குணராசா - வதிரி)

வல்லைவெளியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

**லெப். சலீம்** (சண்முகசுந்தரம் அரவிந்தன் - கரணவாய் தெற்கு)

இதேசம்பவத்தில் சிறிலங்காப் படையினரின் எறிகணைத் தாக்குதலில் வீரமரணமெய்திய

**ஞானி** (நல்லதம்பி இளஞானம் - கரவெட்டி மேற்கு)

நெல்லியடியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

**2ஆம் லெப். டெனிஸ்/அனுரா** (பரமரட்சகவாளன் - பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்)

வளலாய் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

**கரிகரன்/குட்டிக்கண்ணா** (சுதுமலை)

திருநெல்வேலியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த

**சரளன்** (சிவசுப்பிரமணியம் தனஞ்செயன் - கோண்டாவில் மேற்கு)

இதே ஆண்டு வீரமரணமெய்திய

**விந்தன்** (நல்லதம்பி நடராசா - இரணை இலுப்பைக்குளம்)

சக்கோட்டை புனிதசேவியர் தேவாலயத்தின் மீது பருத்தித்துறை முகாம் இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட கணவன், மனைவி, பெண் குழந்தை ஆகிய 3 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு, இந்தியப் படையினரின் துப்பாக்கிச் சூட்டினால் கொல்லப்பட்ட

❋ **றோய்** (சிறிதரன் மரியதாஸ் - மன்னார்)

குறிஞ்சாத்தீவில் இந்தியப்படை மற்றும் தேசவிரோதிகளுடனான மோதலில் வீரமரணமெய்திய

**மயிலு** (வேலுப்பிள்ளை மகேந்திரன் - பச்சிலைப்பள்ளி)

வவுனிக் குளத்தில் இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட சில்லாலையைச் சேர்ந்த நீர்ப்பாசன இலாகா அலுவலர்

1990 ஆம் ஆண்டு மன்னார் தள்ளாடிப் பகுதியில் சிறிலங்காப் படையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரமரணமெய்திய

**லெப். மில்லர்** (இளவிதொச்சி)

**பாரதி** (செபஸ்தியாம்பிள்ளை பாலஅந்தோனி - தர்மபுரம்)

மாந்தையில் சிறிலங்காப் படையினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணமெய்திய

**2ஆம் லெப். வேதமணி/செட்டி** (அப்புசாமி செட்டிமாண்டி - இசங்கன்குளம், அடம்பன்)

**2ஆம் லெப். மயூரன்/ராசன்** (சண்முகநாதன் சந்திரகுமார் - விநாயகபுரம், முழங்காவில்)

நிலாவெளி காட்டுப்பகுதியில் இருந்த எமது முகாமை சிறிலங்காப் படையினர் சுற்றிவளைத்தபோது ஏற்பட்ட மோதலில் வீரமரணமெய்திய

**அரசன்** (யோகநாதன் - பன்குளம், திருமலை)

**கேதீஸ்** (திருமலைநகர்)

எதிர்பாராத வாகன விபத்தில் எமைப்பிரிந்த

**சரத்பாபு** (சுவாரட்ணம் சிவகுமார் - பெரியதம்பனை, [மடுக்கோவில்)

சிறிலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட திருக்கோணமலை 3ஆம் கட்டை அரசினர் பாற்பண்ணை ஊழியர்களான 5 தமிழர்கள்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

❋ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

(B/2301) - **விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

# ஈழநாதம்

## வெள்ளி மஞ்சரி


ஒரு கெரில்லாப் போராளியின் வீரம் அவனது இயந்திரத் துப்பாக்கியில் இல்லை. அவனது மனதில் தான் இருக்கிறது.

— சீலன்



## தேற்றம்

நீ ஈன்ற புதல்வர்க்கு நிகழ்ந்தது
அறியாயோ?
தாயாய்ச் சுமந்தவளின் தாளாத்துயரத்தின்
தீயாய் எழும்புவோம்
தேச விடுதலையின் ஓயாத கீத உருவாய்ப்
பரிணமிப்போம்
விடுதலைவேண்டி விரும்பி விழைந்தவரைப்
படுகொலை செய்தால்!
பரவும் புரட்சித் தீ
வெந்து விடுமோ?
விழலாகிப்போய் விடுமோ?
எந்த இயற்கையும் இதை ஏற்க மாட்டாது
ஆழில் எறிந்தாலும் அஞ்சோம்
அடுத்த கணம்
நூறாயிரகோடி ஆக
நாம் வேரோடி
மீறி எழுவோம் விலங்கனைத்தும்
தகர்ப்போம்
மானத்தின் முன்னர்
மரணம் சரணாகதியாம்

— கல்வயலோன்






"விசுவோட பழகினா அவனில வெறுப்பு வைக்க மாட்டீங்கள், அந்தமாதிரித்தான் பழகுவான், பொதுவா எல்லாரையும் எல்லாருக்கும் பிடிக்காது. ஆனா விசுஎல்லோருக்குமே பிடிச்சவனா நடந்து கொள்ளுவான். ஒவ்வொரு விஷயத்தையும் தெளிவா, ஆறுதலா எல்லோருக்கும் விளங்கக்கூடிய மாதிரி கதைக்கிற தன்மை அவனில இருந்தது. அதாலதான் இயக்கத்துக்கு புதிசா வந்த பெடியங்களெல்லாம் விசுவில அன்பா இருந்தாங்கள். இவன் அவபோட பழகுகிற முறை, போராட்டத்தைப்பற்றி விளங்கப்படுத்துற முறை வேறெவரையும் மறக்க முடியாது." இது வன்னிப் பகுதியில் விசுவின் காலப் பகுதியில் பணியாற்றிய ஒரு போராளியின் அனுபவவாசகங்கள்.

எப்போதும் சீராக உடையணிந்து, சிரித்தமுகத்துடனே காணப்படும் இவனை எளிதில் எவரும் மறந்துவிட முடியாதுதான். இவன் இயக்கத்துடன் தொடர்பு கொண்ட காலத்தில் இரட்டை இலக்கத்தில் மட்டுமே அங்கத்தவர்கள் இருந்தனர். புலிகள் இயக்கம் சர்வதேசரீதியாகப் பிரபலம் அடைந்திருந்தாலும் அங்கத்தவர் தொகை அந்தளவிலேயே இருந்தது. புலிகள் யாரென்பதை இனங்காணுவது கடினம் ஆனாலும் புலிகளைச் சந்திக்க வேண்டும் என்று விசுவும் அவனது நண்பனொருவனும் ஆவலாயிருந்தனர்.

ஏனெனில் அக்கால கட்டத்தில் புலிகள் இயக்கத்தின் பெயரால் மோசடிப் பேர் வழிகள் துண்டுப் பிரசுரம் விடுத்துக் கொண்டிருந்தனர். தாங்களே உண்மையான புலிகள் இயக்கம் என்ற மாயையை மக்கள் மத்தியில் திணிக்கமுயன்றுகொண்டிருந்தனர். தமது சகாவான சுந்தரத்தை பிரபாகரன் குழு கொன்று விட்டதாக ஓங்கி ஒலித்தனர்.

யார் உண்மையான புலிகள் என்று தெரியாத நிலையில் விடுதலை விரும்பிகள் தத்தளித்தனர். ஒருநாள் இயக்கத்தின் துணைத் தலைவராக விளங்கும் மாத்தையா சைக்கிளில் துண்டுப் பிரசுரம் விநியோகித்தபடி வந்தார். "துரோகத்துக்குப் பரிசு" என்ற தலைப்பிலான அந்தத் துண்டுப்பிரசுரத்தில் சுந்தரம் மீது மரணதண்டனைவிதிக்கப்பட்டமைக்கான காரணங்கள் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டிருந்தன. கட்டுப்பாடான அமைப்பைக் கொண்ட இயக்கத்திலிருந்து இயக்கத்துக்குச் சொந்தமான துப்பாக்கியுடனும், பணத்துடனும்மறைந்தமை, இயக்கக் கட்டுப்பாட்டைமீறிதனியொருஇயக்கம் அமைக்க முயன்றமை ஆகிய காரணங்களுக்காக இத்தண்டனை வழங்கப்பட்டது என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. புலியின் இலச்சினை பொறிக்கப்பட்ட அந்தச் சின்னத்தைக் கண்டதும் உண்மையான புலிகளைக் கண்ட மகிழ்ச்சியில் திளைத்தனர்விசுவும்அவனதுநண்பனும்.

இயக்கத்துடன் தம்மை இணைத்துக்கொள்ளுமாறு வேண்டிக்கொண்டனர். உங்களது கோரிக்கை ஆராயப்படும் எனப் பதில் கிடைத்தது. அந்தக் காலத்தில் இருந்த வடிகட்டல் முறையில் இவர்கள் தேறினர். எனவே இவர்கள் ஆதரவாளராகச் செயற்பட அனுமதிக்கப்பட்டனர். தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் ஜீப் மீதான முதலாவது தாக்குதலுக்கு விசுவே தகவல் மற்றும் தங்குமிட ஏற்பாடுகளைக் கவனித்தான். எத்தனை மணிக்கு ஜீப் வருகிறது? என்னென்ன ஆயுதங்கள் வைத்திருக்கின்றனர்? எத்தனை பேர் வருகின்றனர்? எல்லாம் தினசரி சரியாகக் குறிப்பெடுத்து வழங்கியதன் மூலம் அதற்கேற்ற வகையில் திட்டமிட்டு அத்தாக்குதல் வெற்றிகரமாக அமைவதற்கு உதவிசெய்தான். அத்தாக்குதலில் நான்கு சிறிலங்கா பொலிஸ்காரர்கள் கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்து ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

காரைநகர் முகாமிலிருந்து புறப்பட்டு வரும் கடற்படையினருக்கு எதிரான தாக்குதலை மேற்கொள்வதற்காக பொன்னாலைப் பாலத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சி எதிர்பாராதவிதத்தில் வெற்றியளிக்காது போகவே அங்கிருந்து வானில் தப்பிச்சென்ற போராளிகள் நேரே இவனிடம் தான் சென்றனர்.

இந்த மாதிரியானநேரத்தில் விசுவிடம் போவதே அவனை வருத்தும் பாதுகாப்பு எனக் கருதினர் போராளிகள். எல்லோரையும் மறைத்து வைத்திருந்து காப்பாற்றிப் பத்திரமாக அனுப்பிவைத்தான். போராட்டம் வளர்ச்சிபெறாத காலத்தில் இதெல்லாம் மதிப்பிட முடியாத பணிகள் தான். அடுத்த வீட்டுக்கே தெரியாமல் இவ்வளவும்செய்ய வேண்டும். விசுவால் அது முடிந்தது.



### மேஜர் விசு

தொடர்ந்து 83-ம் ஆண்டில் இவன் முழுநேர உறுப்பினராக இணைத்துக் கொள்ளப்பட்டான். இராணுவப் பயிற்சிக்காக கடல் கடந்து சென்ற அவன் பயிற்சி முடிந்ததும் அரசியல் வேலைகளுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டான். அரசியல் கற்கவானவன். அது முடிந்ததும் தாய்நாட்டிற்கு மீண்டும் திரும்பிய இவன் வன்னி மண்ணில் எதிரிகள் மீது இலக்குப் பார்த்தான், எண்ணற்ற தாக்குதல்கள். அத்தாக்குதல்கள் இவனது தனித்திறமையைப் பறைசாற்றின. நாளடைவில் இவன் குழுத்தலைவனானான். யாழ். கண்டி வீதியில் 18ஆம் போர் எனும் மிடத்தில் நிகழ்ந்த சிறிலங்கா இராணுவவாகனத் தொடர் அணி மீதான தாக்குதல், கிளிநொச்சி நகரை புலிகளின் கட்டுப்பாட்டினுள் கொண்டு வருவதற்காக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் என்பன துணிச்சலுக்கு விசு என்ற பெயரினைப் பெற்றுத்தந்தன. வன்னி மண்ணில் இவன் போகாத இடமேயில்லை. அடுத்தடுத்த ஊர்களை மட்டுமல்ல அடுத்தடுத்த வீட்டுக்காரர்களின் பெயரைச் சொல்லக்கூடியளவுக்கு வன்னி மண்ணோடு பரிச்சயமானான். ஒரு முறை இவன் ஒரு வீட்டிற்குச் சென்றால் போதும். அதன் பின் அந்த வீட்டிற்கு எந்தப் போராளி சென்றாலும் 'விசு எப்பிடியிருக்கிறார். நாங்கள் விசாரிச்சதெண்டு சொல்லுங்கோ' என்று சொல்லுமளவிற்கு வன்னி மக்கள் மனதில் இடம் பிடித்துக் கொண்டான்.

1987ஆம் ஆண்டு வடமராட்சியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட ஒப்பிரேசன் நடவடிக்கையின் பின்நெல்லியடியில் உள்ள மகாவித்தியாலயத்தில் அமைந்திருந்த இராணுவ முகாம் மீது நடைபெற்ற முதற் கரும்புலித் தாக்குதலில் இவனது பங்கு மகத்தானது இது இவனது சொந்த இடமாகையால் மேலதிக பணிகளையும்

(2ஆம் பக்கம் பார்க்க)

# சந்ததி சரிதம்

சிறுகதை

செ. பொ. சிவனேஷ்

வைதேகிக்கு அடிக்கடி அப்பாவின் நினைவு நிழலாய் மட்டும்தான் தெரியும். விவரம் புரியாப் பருவத்தில் பிரிவு. ஈழத்துக் காற்றில் தாராளமாய்த்தான் உலவியது வெளிநாட்டு மோகமும். ஒரு சில சிதறல் அவருக்குள்ளும் விழுந்தது. உவ்வளங்கினார்; ஈடு வைக்கத் தோட்டக்காணி இருந்தது. யார் செய்வது? அதனுடன் கொத்தி முறிய யாரால் இயலும்? இயன்றாலும் ஒரு அரசாங்க சேவையாளனுக்கு சரிப்பட்டு வருமா? காணி சீதனமாய் வந்தது. சும்மாதானே கிடக்கிறது? ஈட்டுக்காரர் வீட்டில் உறுதிக்குத் தஞ்சம் கிடைத்தது. அவருக்கு வெளிநாட்டில் கிடைத்தது.

வைதேகிக்கு வயது இப்போது ஏழு. இரண்டாம் வகுப்பு. மெல்ல மெல்ல விவரங்கள் புரிய வருகிறது ஆனாலும், அப்பா கறுப்பா? சிவப்பா? புகைப்படத் தொகுப்பை எவ்வப்போது புரட்டுவாள். முகத்தை அறிந்து கொள்ள முடிந்தது.

பதிந்து உறைந்த பிம்பத்தை அசைய வைத்தது அவளது நினைவு. அடிக்கடி நினைவு. அப்பா வருவார். கட்டித் தழுவுவார். இரண்டு கன்னங்களிலும் மாறி மாறி முத்தம் கொடுத்துத் திணறடிப்பார். தோளில் வைத்துக் காவடி ஆடுவார். முதுகிலேற்றிக் குதிரை ஓடுவார். சிலவேளைகள் கனவுகளிலும் கூட.

அப்பா வந்து போனதும், இதயம் 'லப்டப்' ஒலியை மறந்து போகும். ''அப்பா எப்ப வருவார்? எப்ப வருவார்?'' என்று தான் அடிக்கத் தொடங்கும். தொடரும் சில நிமிடங்கள் அதையே சுமந்து தரும், வாட்டம் தாங்காது.

ஒருநாள் அம்மாவிடம் வெளிவிட்டே கேட்டாள்

அம்மா சொன்னாள்; 'எங்கட பிரச்சினை தீர்ந்தவுடனே வருவார்.'

வைதேகிக்குப் புரியவில்லை. 'எங்கட பிரச்சினை எண்டா?'

'நாட்டுப் பிரச்சினை. நாட்டில நடக்கிற சண்டை'

'எப்ப தீரும்?'

'கெதியாத் தீரும். அப்பாவும் கெதியா வருவார்' அம்மா நம்பிக்கையூட்டினாள்.

முதல் தடவை கேட்டபோது ஆறுதல். பூரண நம்பிக்கை. ஆனாலும், நீடிக்க வகையில்லை. பக்கத்து வீட்டுப் பெரியவரின் வார்த்தைகள் அடித்தளத்தை ஆட்டின. நம்பிக்கையை உலுப்பின.

பின்பொரு நாளில் கேட்க நேர்ந்தது. பெரியவர் விருந்தாளியுடன் பேசிக்கொண்டிருந்தார். பத்தும் பலத்திலும் அரசியல் ஒன்று. ஓரிடத்தில் சொன்னார். 'உதெங்க தீரப் போகுது? இப்பிடியே இழுபட்டுக் கொண்டுதான் போகும்!'

தணுக்குற்றாள். திரும்பி ஓடிவாள்.

'அம்மா! நாட்டுப் பிரச்சினை தீராதேம்மா?' குரலில் தளுதளுப்பு.

அம்மாவுக்குக் குழப்பம். வியப்புக் கலந்த ஆதரவாய்த் தழுவினாள் மகளை. 'ஏன் அப்பிடிக் கேக்கிறீங்கள்? ஆர் சொன்னது?'

'கந்தையா அப்புதான் சொல்லுறார்' தளுதளுப்பு நீங்கவில்லை.

அவருக்கு விசர். ஒண்டுந் தெரியாது வயசு போனவை சும்மா பிசத்துவினம். பிரச்சினை கெதியாத் தீரும்.'

அம்மாவை நம்பலாமா? முடியாதா? புரியவில்லை. குழப்பம். முயன்று பார்த்தாள் வைதேகி. முதலில் மனம் இசைந்தது. நம்பியது. பிறகு, நம்பாமலும் போனது. தனிர்க்கவொண்ணா ஊசலாட்டம்.

இப்போது ஊசலாட்டமே வழமை. நம்பிக்கையீனம் விரட்ட மீண்டும் கேட்டாள். அம்மா திரும்பவும் சொல்வாள். தற்காலிக நம்பிக்கை ஏற்படும். பலவந்தமாய் ஏற்படுத்திக் கொள்வது. குழந்தை மனம் வலிந்தே சில நம்பிக்கைகளை வரித்துக்கொள்ற இயல்பு.

அம்மா மகளுக்கு நம்பிக்கை யூட்டினாள். ஒவ்வொரு தடவையும் ஊட்டினாள். உணவு ஊட்டுகிற போதும் உணவை விடவும் அதிகமாய். ஒவ்வொன்றிலும் முன்னைவிட அதிகப் பிரயத்தனம், அழுத்தம். அகத்தில் நம்பிக்கையீனத்தின் அழுத்தமா, வார்த்தையில் நம்பிக்கையூட்டலின் அழுத்தம்? போகப் போக அம்மாவுக்குமா? ஆனாலும் நம்பிக்கையூட்டினாள்.

பிறிதொருநாள் வைதேகி கேட்டாள்; 'ஏனம்மா, அப்பா வெளிநாட்டுக்குப் போனவர்?'

'காசுழைக்க.'

'காசுழைச்சு என்ன செய்யிறது?'

'காணிய மீட்க வேணும், வீடு கட்டவேணும், பிள்ளைக்கு நகையள வாங்க வேணும், ஆசைச் சட்டையெல்லாம் கனக்க வாங்க வேணும்.'

''வீடு என்னத்துக்கு எங்களுக்கு வீடு இருக்குத் தானே?

''இது பழசாப் போச்சு திருத்திக்கட்ட வேணும்.''

''அப்ப நகையள் என்னத்துக்கு? அலுமாரிக்க கனக்க வெச்சிருக்கிறியள் தானே?''

''அது பிள்ளைக்குக் காணாது, வளந்தாப் பிறகு இன்னும் கனக்கத் தேவைப் படும்.''

மேற்கொண்டு எதுவும் கேட்கவில்லை. அம்மா சொன்னவை விளங்கின. விளங்காமலும் போயின எல்லாம் தேவை விளங்கியது. ஏன் தேவை? விளங்கிக் கொள்ள இயலவில்லை எந்த விதமாய்க் கேட்பதென்றும் விளங்கவில்லை. மௌனமானாள்.

## 2

பட்டணத்துப் பள்ளிக்குச் செல்ல வேண்டிய காலை. வைதேகி கிளம்பினாள். பக்கம் தான். பத்து வீடு தள்ளி, பட்டணத்துக்கு அனுப்பத்தான் அம்மாவுக்கு ஆசை. பெருமை அங்கு தான். உள்ளூர்ப் பள்ளிகளால் முடியுமா வரட்டுக் கௌரவத்தை விற்பனை செய்ய? வக்கற்றவை! பட்டணத்தில் தான் எல்லாம் ஆனாலும் வசதியிருந்தென்ன? வகையில்லை.

தெருவில் இறங்கு வதென்றாலே திகிலைத் தரும் பதமாய்த் திரிந்து போன காலச் சூழ்நிலை! மனித நடமாட்டங்களே செத்துப்போன சுடுகாடாய் இப்போதெல்லாம் தெருக்கள் வான வெளியில் உலங்குவானூர்திகள் உறுமிக் கொண்டு வரும் மனிதர்களைக் கண்டாலோ பிடிக்காது புளியம்பழங்களாய் உலுப்பித் தள்ளும் துப்பாக்கி ரவைகளை போதாக்குறைக்கு எறிகுண்டு எடுக்கிற பலியிலும் திருப்தியின்மையோ படையினருக்கு? பிறகு தேவையில்லாமல் தெருவில் நடப்பானேன்? வீடுகளுள் முடங்கல் பெரியவர்களை ஒதுக்குகிற காலம்! குழந்தையை?

பட்டணம் ஐந்து மைல்; பாடசாலை என்றாலும் கூடப் பாராது குண்டுகளை வேறு கவிழ்த்து கொட்டுகுறான் அனுப்பி வைத்தால் எதுவும் ஒடனே. வாசலை வாசலையே கண்கள் வெறிக்கும் அந்தர்க் கணக்காய் நெஞ்சுக்கூட்டுக்குள் உதைப்புகள் விழும் வந்துசேர்கிறதுவரை ஏக்கம். வழமை இப்படித் தான் நீளும் ஒத்துவராது குழந்தை கண் முன்னாலேயே நடமாடட்டும் படிப்பும் குழப்ப வேண்டாம் பதைபதைப்பையும் சுமக்க வேண்டாம் பக்கத்திலேயே போய் வரட்டும்.

பிரத்தியேக கல்வி நிலையம் முன்பு மாலைநேர வகுப்புகள் மட்டும் காலத்தின் தேவையை ஒட்டி காலை நேர வகுப்புகளாய் மாற்றம். நிர்வாகியும் ஆசிரியையும் ஒரே பெண் படித்துவிட்டு வீட்டில் இருக்கும் பெண் சொந்த வதிவில்லத்திலேயே கல்வி நிலையம்.

வைதேகி படியேறும் போது ஆசிரியை வகுப்பறையில் இருந்தார். கரும்பலகை ஓரத்தில் அவரது மேசைமுன்னாலுள்ள நாற்காலியில் இருந்தார். இரண்டொரு அப்பியாசப் புத்தகங்களுள் முகம். பாலகுகனும் இருந்தான், வகுப்புத் தோழன். அவன் தனது ஆசனத்தில் பார்வை எங்கோ நிலைகுத்தி இருந்தது ஆழ்ந்த சிந்தனை.

மற்றைய ஆசனங்கள் எல்லாம் வெறுமை. போதனை வேளை ஆரம்பிக்க அரை மணிக்கு சற்றேறக்குறைய அவகாசம் இருந்தது. ஏனைய குழந்தைகள் இன்னமும் வந்து சேரவில்லை. வகுப்பறை முழுமையும் அமைதியின் அமுக்கலில்

அம்மாவின் கையில் பற்றியிருந்த பிடியை இன்னும் இறுக்கிக்கொண்டு படியில் தத்தினாள், காலை வணக்கத்துடன் ஆசிரியை சட்டென்று தலையை நிமிர்த்தினார். நேசம் மிகுந்த புன்னகை. பதில் வணக்கம். சம்பிரதாயத்திற்காக அம்மாவுடனும் இரண்டுவார்த்தைகள். பதில் பேசிவிட்டு அம்மா விடைபெற்றாள். வைதேகியை உட்காரச் சொன்ன ஆசிரியை, மீண்டும் தானும் தன் வேலையுமாய்.

பாலகுகனிடமிருந்து ஒரு பரிச்சயப்புன்னகை. புன்னகை மட்டும் தான். பிறகு, அவனுக்கும் அவன் சிந்தனை.

அமைதி நீண்டுகொண்டு போனது. சில நிமிடங்களிலேயே அவனுக்கு சலிப்புத் தட்டியது. இத்தகைய மௌனத்தின்மீது எப்போதுமே வெறுப்பு. ஒரு பிடிப்பற்ற தன்மையை ஏற்படுத்தி விடு கிறசமாச்சாரம். எப்போதும், யாருடனும், எதைப்பற்றியாவது பேசிக்கொண்டிருக்க வேண்டும். வாய்த்து விட்டால் சின்ன மனுஷி நூறு கேள்விகள். விடை தெரிந்தே ஆக வேண்டும். துளைத்தெடுத்து விடுவாள்.

இப்போதும் ஏதாவது பேச மனம் அவாவுற்றது. அடைக்க முடிவது வாயைத்தான். மனத்தை? துருதுருத்தது. முட்டிமோதியது. ஆனாலும், இதழ்க் கதவுகள் உடனடியாகத் திறந்து கொள்ளவில்லை; எதைபபற்றிப் பேசுவது?

காரணமின்றி அப்பாவின் நினைவு. சில கணங்கள்தான். தொடர்ந்து மூழ்குவதென்றால் எத்தனை நாளிகைக்கு? வாட்டும். கவனம் மீண்டும் இங்கு. பாலகுகன் கவனத்தை தன்வசம் திருப்பினாள். பேசுவதற்கு சங்கதி கிடைத்துவிட்டதே. அப்பாவைப் பற்றி பேசத் தொடங்கினாள். ஆச்சரியத்துக்குரிய விதம் - பெரியவர்கள் பாங்கில் பேசினாள். சிறுமைகளே பெருமைகளாய், பெருமைகள்தான் சிறுமைகளாய்-பெரியவர்கள் பாங்கு. பால்வடியும் வாயிலிருந்து அத்தகைய வார்த்தைகளும் வடிந்தன. வெளிநாட்டு அப்பாவைப் பற்றிப் பெருமையாகப் பேசினாள்:

அப்பா இதுவரைக்கும் என்னவெல்லாம் அனுப்பினார்? ஒரு பட்டியல் சட்டையைப் பிடித்துக் காட்டினாள். 'இது தீபாவளிக்கு அனுப்பினவர்.'

'அங்கேயிருந்து ஒரு மாமா வரேக்க இதைக் கொடுத்துவிட்டவர். இஞ்சை ஒரு கடையிலயும் வாங்கேலாது. இந்தச் சப்பாத்தும் அப்பிடித்தான்.'

இனி வரும்போது என்னென்ன கொண்டு வருவார். அம்மா சொல்லித் தெரியும். அம்மாவின் வார்த்தைகளில் அப்படியே விவரணை. என்னவு பிசகில்லை. பச்சிளம் பருவம் அபார ஞாபகசக்தி. பசுமரத்தில் ஆணி.

தோழியின் பேச்சில் பாலகுகன் குறுக்கீடு செய்யவில்லை. மௌனம், உன்னித்த கவனம். முகத்தில் மந்தாரம். மனத்துள் தூறல். வேதனைத் தூறல். அப்பா இல்லை! வெளிநாடு இல்லை. சட்டையும் இல்லை, சப்பாத்தும் இல்லை! அப்பா! சின்ன உதடுகள் துடித்தன, தோழியின் பேச்சிற்கு ஒப்ப தாளம் போடுவது போல.

வைதேகி பேசினாள். எல்லாமுமாகப் பேசி நிறுத்தினாள். தொடர்ந்தும் அவனிடம் மௌனம். இன்னும் மௌனம். அவனைப் பேச வைக்க விழைந்தாள், 'உங்கட அப்பா எங்க இருக்கிறார்?'

பிஞ்சு இதழ்கள் மெல்லப் பிரிந்தன. 'அப்பா இல்ல. செத்துப் போனார்.' வேதனையின் பிசிறல் குரலில்.

அப்பா இறந்தது தெரியாது. ஒரு வயது. அவனது விவரம்

(6ஆம் பக்கம் பார்க்க)



கவிதை

# தேசத்தின் விருட்சம்

முகம் யாரென்பது தெரியாது
வயதை ஓரளவு கணக்கிட முடியும்
துவக்கு
சீருடை
சப்பாத்து
கழுத்தில் 'சயனைட் குப்பி'
மண மீட்பும்
இனத்தின் விடுதலையும் அவனுள் கனலும்
அவனைத் தெரியும்
விடுதலைப் போராளி.

வீதிகளில் அவன் போகவும்
நாய்கள் குரைப்பதில்லை
மனிதர்கள் அச்சமுறுவதில்லை
குழநதைகள் அவனிடம்
நட்பும் உரிமையும் கொள்கிறார்கள்.

அவனது துப்பாக்கியை
இந்த மனிதர்கள் நேசிக்கின்றனர்
அவனைத் தன்னுடைய புதல்வன்
என்பதில் பெருமிதம் கொள்கிறது கிராமம்.

மாவள்ளியும் உழுந்தும் விளையும் புலவில்
ஒரு நேர விவசாயி
எல்லையில்
சன்னங்கள் துளையிட்ட காட்டு மரங்களின்
அடியில்
முழு நேரமும் சுடுகலனுடன்
புதைத்து வைத்த வெடிகளின்பின்புறம்
எதிரியின் நுழை பார்த்திருக்கும் காவலின்
காற்று

அவன் விடுதலையின் குறியீடு
சுதந்திரத்தின் படிமம்

இவனின் தியாக முச்சில்
தேசத்தின் விடுதலையும்
இனத்தின் சுதந்திரமும் விளையும்
மனிதர்கள்
பறவைகள் போல் கவிதை பாடுவார்கள்

எஸ். கருணாகரன்

# அமிரின் ஓராழ தாளங்கள்

1949 ஆம் ஆண்டு தமிழரசுக்கட்சி அங்குரார்ப்பண வைபவத்தின் போது எஸ். ஜே. வி செல்வநாயகம் கூறிய சில வார்த்தைகள் அமிர்தலிங்கத்திற்கு அப்படியே பொருந்தும்.

"பல முறைகளில் தலைவரென்போர் எங்களைக் காட்டிக் கொடுத்து விட்டார்கள். வீரர்களாகக் காட்சியளித்து மக்களின் நம்பிக்கையைப் பெற்ற தலைவர்கள் ஒருநாள் நிமிர்ந்து நின்று போராடி, மறுநாள் களத்தையே விட்டு ஓடிவர்."

அமிர், ஒரு காலத்தில் தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கியவர். தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றவர். தமிழ் மக்களால் அன்பாகத் "தளபதி" என அழைக்கப்பட்டவர். ஆனால் பின்பு எதிரிகளின் பாசறையில் இணைந்து கொண்டவர், தமிழீழப் போராட்டத்தை எதிரிகளிடம் அடகு வைத்தவர். "கெட்டிக்காரன் புளுகு கொஞ்ச நாளைக்கு" என்பது போல இவரால் தமிழ் மக்களை நீண்ட காலத்திற்கு ஏமாற்ற முடியவில்லை. இவரது சில நடவடிக்கைகளை அப்படியே தொகுப்பதன் மூலம் இவரை இலகுவாகவே எடைபோட்டு விடலாம்.

1970 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல் காலத்தில் புளியங்கூடலில் காவலூர் நவரத்தினத்துடன் பொது மேடையிற் தோன்றி விவாதம் புரிகையில் "தனிநாட்டுக் கோரிக்கை பயித்தியக்காரத்தனமானது. தற்கொலைக்கு ஒப்பானது" எனக் கூறியவர் (அமிர்).

1970 பொதுத் தேர்தலில் அமிர் தோல்வி அடைந்ததும் தான் இழந்த தலைமையைப் பெறுவதற்கான ஒரு தந்திரமாக தமிழ்மக்கள் மத்தியில் கருவிடத் தொடங்கிய தமிழீழக் கோரிக்கையைக் கையில் எடுத்தார் சிங்கள இன ஒடுக்குமுறையால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் தனிநாடு அமைப்பதே ஒரே வழியென உணரத் தலைப்பட்டபோது தமிழீழக் கோரிக்கைக்காகப் போராடுபவராக தன்னைக்காட்டி மக்கள் முன் தோன்றினார். மக்களும் நம்பி ஏகோபித்த ஆதரவை அளித்தனர்.

1977 பொதுத் தேர்தலில் தமிழீழம் அமைப்பதற்கான ஆணையை மக்கள் அளித்ததும், தமிழீழத் தேசிய மன்றத்தை அமைப்பேன் என உறுதி அளித்தார். மக்கள் ஆணை அளித்தனர்; ஆனால் அமிர் தேசியமன்றம் அமைக்கவில்லை.

தேசிய மன்றம் அமைக்காததைக் கண்ட இளைஞர்கள் அமிரின் தலைமை மீது கேள்வி எழுப்பத்தொடங்கினர். யாழ் நகரில் 4ஆம் குறுக்குத் தெருவில் ஒரு சுவரில் பின்வருமாறு ஒரு வாக்கியம் 1980 ஆம் ஆண்டு பொறிக்கப்பட்டிருந்தது.

"அமிர், தப்புத்தாளம் போடாதே! தமிழீழத் தேசிய மன்றம் எங்கே!"

ஈழமண்ணில் இந்திய இராணுவத்தின் காலத்தில் (1987) யாழ். நகரில் விவேகானந்தா அச்சகச் சுவரில்;

'காந்தியை கோட்சே கொன்றார். ஆனால், காந்தியத்தை ரஜீவ் கொன்றார்'' என ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்த வாக்கியத்தின் வரலாற்று முக்கியத்துவத்தை ஒத்ததே அமிரைப்பற்றி 4 ஆம் குறுக்குத்தெருவில் எழுதப்பட்ட வாக்கியமும்,

தமிழீழத்துக்காகப் போராடுவதற்காக மக்கள் கொடுத்த ஆணையின் மூலம் பதவியைப் பெற்றுவிட்டு, அடுத்த ஆண்டுகளில் தமிழீழத்துக்கான சிறு போராட்டத்தையோ அன்றி போராட்டத்துக்கான ஆயத்தங்களையோ கூடச் செய்யாத அமிர்தலிங்கம் குழுவினர்,

பாராளுமன்றத்தை பிரசார மேடையாக்குவோம் என்று கூறி தேர்தலில் வெற்றி பெற்றுவிட்டு ஜெயவர்த்தனவுடன் இரகசிய உடன்பாட்டுக்கு வந்து, அதன் பின்னர் தமிழீழம் என்னும் வார்த்தையைக்கூட பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் பேசுவதைத் தவிர்த்து விட்ட அமிர்தலிங்கம் குழுவினர்,

தேர்தலில் வெற்றிபெற்றவுடன் தேசியமன்றம் அமைப்போம் என்று கூறி மக்களின் வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றவிட்டு, 'தேசிய மன்றம் அமைக்கும் சூழ்நிலை ஏற்படவில்லை' என்ற குதர்க்க விளக்கங்கள் கூறிக்கொண்ட கொள்கையில் குத்துக்கரணமடித்த அமிர்தலிங்கம் குழுவினர்,

கொழும்பில் பாதுகாப்பற்ற சூழ்நிலை ஏற்பட்ட காரணத்தால் தமது உயிருக்குப் பயந்து பாராளுமன்றத்துக்குச் செல்லாமல் இருந்துவிட்டு, "பிரிவினைத் தடைச் சட்டத்தை ஆதரித்து சத்தியப் பிரமாணம் செய்யமாட்டோம். தமிழர்களுக்காகப் பதவி துறக்கிறேம் என்று வீராவேசமாக முழக்கமிட்டு விட்டு, கொழும்பில் இருப்பதற்கு சிங்கள ஆயுதப்படையின் பாதுகாப்பு கிடைத்ததும் அதே பிரிவினைத் தடைச் சட்டத்தை ஏற்று சத்தியப் பிரமாணம் எடுத்து தேர்தலில் குதித்த அமிர்தலிங்கம் குழுவினர்,

தமிழீழத்துக்காகப் போராடுவதற்கு மக்கள் கொடுத்த ஆணையினால் பதவியைப் பெற்றுவிட்டு, தமிழர்களின் அடிப்படை உரிமைகளையே பறித்து அவர்களை அடிமைகளாக்கும் வகையில் 1978 இல் ஜெயவர்த்தனாவால் கொண்டுவரப்பட்ட புதிய அரசியலமைப்புச் சட்டத்தை எதிர்த்து எதுவித போராட்டத்தையும் நடத்தாத அமிர்தலிங்கம் குழுவினர்,

1979 ஆம் ஆண்டு இன்பம், செல்வம் உட்பட ஏராளமான தமிழிளைஞர்களை வேட்டையாடி சித்திரவதை செய்து கொன்று குவித்த சிங்களப் பொலிசாரின் கொலை வெறித்தனத்தைக் கண்டிக்காது ஊமைகளாக இருந்துவிட்டு, சிங்கள அரசின் பிரதமரோடு சேர்ந்து தமிழ்ப் போராளிகளைக் கண்டித்து கூட்டறிக்கை விட்ட அமிர்தலிங்கமும் குழுவினரும்,

"தமிழீழம் அமைக்கவே மக்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். எனவே பாராளுமன்றத்தில் விசுவாசமான எதிர்க்கட்சியாக இருக்கமாட்டோம்'' என்று தேர்தலில் வெற்றி பெற்றவுடன் கூறிவிட்டு ஆயிரக்கணக்கான தமிழர்கள் சிங்கள வெறியர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட வேளையில், சிங்கள அரசுடன் சேர்ந்து "இலங்கை ஓரே நாடு சிங்களவர்களும், தமிழர்களும் நீண்டகாலமாக ஒற்றுமையாக வாழ்கிறோம்'' என்று உண்மைக்கு மாறான வாசகங்களைக் கொண்ட யாசக மனுவில் கையெழுத்திட்டு ஒபெக் நாடுகளுக்கு குறைந்த விலையில் எண்ணை தரும்படி விண்ணப்பித்த அமிர்தலிங்கம் குழுவினர்.

"ஈழத் தமிழர் அமைப்புகள் ஒன்றுபட வேண்டும், போராளிகள் இயக்கங்கள் ஒன்றுசேர வேண்டும்'' என்று ஒருபுறம் அறைகூவல்விடுத்துக்கொண்டு இரகசியமாக அமிர்தலிங்கத்தின் மகன் தலைமையில் ஆயுதப்படையை அமைத்து அதற்கு புலிகளின் பெயரில் வெளிநாடுகளில் பணம் திரட்டிக் கொடுத்த அமிர்தலிங்கம் குழுவினர்,

சிறிலங்காப் பாராளுமன்றத்தில் தமிழீழ விடுதலைப் போராளிகளை கிரிமினல்கள் என்று கொச்சைப்படுத்திய அமிர்தலிங்கம் குழுவினர்,

தமிழர்களின் கடந்தகால வரலாற்றையே சிறுமைப் படுத்தும் வகையில் சிறிஜெயவர்த்தனபுரவில் புதிய பாராளுமன்றக் கட்டடத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு தமிழினத்துக்குத் துரோகம் இழைத்த அமிர்தலிங்கம் குழுவினர்,

இந்தியப் பேரரசின் நெருக்குதலுக்கு மத்தியிலும் உறுதியாக நின்று பல்வேறு இழப்புகளின் மத்தியில் தமிழ் மக்களுக்காகப் போராடிவரும் விடுதலைப் புலிகளைக் கண்டித்தும், தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு எதிராகவும் அறிக்கைகளை விட்டு பேட்டிகளையும் கொடுத்து தமிழீழ மக்களை குழப்பும் வகையில் செயற்பட்டு வந்த அமிர்தலிங்கம் குழுவினர்,

விடுதலைப் புலிகளையும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் நசுக்கும் ஒரே நோக்குடன தமிழீழத்தில் அராஜகம் புரிந்துவந்த இந்தியப்படை வெளியேறக்கூடாது என்றும், அந்த அராஜகப் படை பொதுமக்கள்மீது மேற்கொண்டுவந்த படுகொலைகளையும், கற்பழிப்புகளையும், சூறையாடல்களையும் கண்டிக்கக்கூடாது என்று கூறியதுடன், இந்தியப்படை புரிந்த படுகொலைகளுக்கு 'யுத்தத்தின் நிர்ப்பந்தத்தினால் ஏற்பட்ட மரணங்கள்' என்று புதிய வரைவிலக்கணத்தையும் தேர்தல் அறிக்கையில் முன்வைத்து கடந்த தேர்தலில் மக்களால் முற்றாக விரட்டியடிக்கப்பட்டதன் பின்னர், பின் கதவால் பாராளுமன்றத்துக்குள் நுழைந்து அங்கேயும் தமிழ் மக்கள் விருப்பத்துக்கு மாறாக – இந்தியப் படை திரும்பிச் செல்லக் கூடாது என்று கொக்கரித்த அமிர்தலிங்கமும் – அவர் குழுவினரும்,

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் அப்பிரட்டுத்தரையப்பாவிலிருந்து அமிர்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

# உலங்கு வானூர்தியின் பறத்தலுக்கான தத்துவம் இலகுவானதானாலும் 20நூற். மத்தியிலேயேவெற்றிபெற்றது

உலங்கு வானூர்திகளின் தோற்றத்திற்கான எண்ணக் கரு, 1483இல் பிரபல ஓவியர் லியனாடோ டாவின்சியின் குறிப்புப் புத்தகத்தில் காணப்பட்டது. மனிதனின் பறத்தலுக்கான ஆராய்ச்சியில் விமானங்களிலுள்ள குறைபாடு நீண்ட ஓடுபாதைக்கான தேவையாகும். இதனை நீக்கும் முயற்சியில் பலகால ஆராய்ச்சியின் பயனே உலங்கு வானூர்திகளாகும்.

இதன் பறத்தலுக்கான தத்துவம் மிக எளிதானதாக இருப்பினும் 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தொடங்கிய முயற்சி செயலுருவம் பெற்றது 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆகும். இவற்றின் செயற்பாடு கொள்கையளவில் சாத்தியமானதாக ஏற்றுக்கொள்ளப் பட்டதாயினும் பலரது சந்தேகத்திற்குரியதாகவும் முரண்பாடுடையது போன்ற தோற்றத்தைக் கொண்டும் இருந்தது. இவ்வாறான தன்மைதான் இவற்றைக் கண்டுபிடிப்பதற்குத் தூண்டுகோலாகவும் இருந்தது எனலாம்.

இவற்றின் அடிப்படை சிறுவர்களின் ஒரு விளையாட்டுக் கருவியை ஒத்ததாகும். நீண்ட, அகலம் குறைந்த, சிறிது வளைக்கப்பட்ட தகடானது நடுவில் சிறிய துவாரத்தைக் கொண்டிருக்கும். இத்துவாரத்தினூடாக சேர்த்து முறுக்கப்பட்ட இரண்டு சிறிய கம்பிகள் செலுத்தப்படும் தகடானது மேல் நோக்கி இம்முறுக்குகளினூடாக தள்ளப்படும்போது வேகமாகச் சுழன்று காற்றில் பல அடி உயரத்திற்கு எழும். இவ்வாறான செயற்பாட்டில் தான் உலங்குவானூர்திகள் இயங்குகின்றன.

உலங்குவானூர்திகளிலுள்ள காற்றாடியின் சுழற்சி வேகமானது படிப்படியாக அதிகரிக்கும்போது காற்றழுத்த வேறுபாடு காரணமாக வானூர்தி மேலெழத் தொடங்கும் காற்றாடிகள் மீன்வடிவமான சிறிதளவு வளைக்கப்பட்ட இறகுகளைக் கொண்டிருக்கும். இவை வேகமாக காற்றினை வெட்டும்போது "காற்றுப்படிகள்'' (Wind stair case) உருவாகின்றன எனக் கொள்ளலாம், எனவே வானூர்தியானது வழமையான விமானங்கள் போலல்லாது படிப்படியாக மேலெழவோ கீழிறங்கவோமுடியும்.

நிலையான இறகுகளையுடைய விமானங்கள் அவற்றின் சிறகின்கீழ் ஏற்படும் காற்றழுத்தம் காரணமாக மேலெழுகின்றன. இவ்வாறான பறத்தலுக்கு பெருமளவு சக்தி தேவைப்படுகிறது.

## வேலவன்

உலங்கு வானூர்திகளின் இயக்கத்தில் பல சிக்கலான தன்மைகள் இருந்தன. இவற்றைத் தீர்ப்பதில் பொறியியல் ரீதியில் பல சிரமங்கள் இருந்தன.

1842இல் ஆங்கில ஆராய்ச்சியாளர் ஜோர்ஜ் காய்லி என்பவரின் நான்கு காற்றாடிகளைக் கொண்ட நீராவி இயந்திர வானூர்தியும் 1878 இல் இத்தாலிய விஞ்ஞானி என்றிக்கோ போர்லானி என்பவரின் சிறிய நீராவி வானூர்தியும் மிகக் குறைந்த நேரத்திற்கு குறைந்தளவு உயரத்திற்கே மேலெழ முடிந்தது. இவற்றின் கனம் இயக்கத்திற்கு தடையாயிருந்தது. மண்ணெண்ணை இயந்திரங்களின் பாவனைக் காலம் தொடங்கியதும் இவை பற்சக்கரங்களின் உதவியுடன் வேகமாகச் சுழலக்கூடிய காற்றாடிகள் கொண்டு அமைக்கப்பட்டன. 1904இல் பிரெஞ்சு விமானத் தயாரிப்பாளர் லூயிஸ் என்பவரால் செய்யப்பட்டபெரிய உலங்குவானூர்தி மனிதனுடன் ஐந்தடி உயரத்தில் 2நிமிடங்கள் பறந்தது இதுவே தொழில்நுட்ப ரீதியில் முதலாவது வெற்றிப் பறப்பாகும். ஆயினும் இது சக்தி குறைந்ததும நடைமுறையில் இயக்கச் சாத்தியம் அற்றதாகவும் காணப்பட்டது.

நடைமுறையில் முதலாவது உலங்கு வானூர்தி எனக் கொள்ளக்கூடியது 1923இல் ஸ்பானிய பொறியியலாளரால் தயாரிக்கப்பட்டது. இது தொழில்நுட்ப ரீதியில் முன்னேற்றகரமான ஒன்றாகக் காணப்பட்டது. எனினும் தத்துவ அடிப்படையில் மேல் நோக்கி எழமட்டுமே உலங்கு வானூர்தி எனக் கொள்ளப்பட்டது. ஏனெனில் முன்னோக்கிய இயக்கத்திற்கு வழமையான நிலையான சிறகுகளையுடைய விமானங்களில் பாவிக்கப்படும் சாதனமே இங்கு பயன்படுத்தப்பட்டது.

1937இல் ஜேர்மன் விஞ்ஞானி ஹென்றி போர்க்கினால் தயாரிக்கப்பட்ட இரண்டு காற்றாடிகளைக் கொண்ட உலங்கு வானூர்தியாகிய எவ். டபிள்யூ -61, நடைமுறையில் தத்துவ ரீதியாகவும் சிறந்த முறையில் இயங்கியது. இது தனது முதலாவது பறப்பை பிறீமனிலிருந்து பேர்லின் வரை ஒரு மணித்தியாலம் 20 நிமிடத்தில் பறந்துகாட்டியது.

இரட்டைக் காற்றாடிகளைக் கொண்ட இவ்வானூர்தியின் இயக்கம் மிகவும் சிக்கலானதாக இருந்தது மட்டுமின்றி வானூர்திகளின் வடிவம், இறக்கைகளின் வடிவம் முன்னோக்கிய இயக்கத்தைக் கட்டுப்படுத்தல் என்பன இவற்றின் வளர்ச்சியில் தடைகளாக இருந்தன. அத்துடன் முன்னோக்கிய இயக்கத்தின்போது இரு காற்றாடிகளும் வெவ்வேறு காற்றழுத்தங்களைக் கொடுத்ததால் இயக்கத்தில் தளம்பல்கள் ஏற்பட்டன. அத்துடன் வானூர்தியில் திருப்பமும் ஏற்பட்டது போர்க் இருமாறுபட்ட திசைகளில் இவ்விருகாற்றாடிகளையும் சுழலச் செய்வதன் மூலம் தீர்வு கண்டார். டச்சு விஞ்ஞானியான சிக்கோர்சி என்பவர் பெரிய ஒரு காற்றாடியையும் வாலில் பொருத்தப்பட்ட சிறிய ஒரு காற்றாடியையும் உபயோகித்து இப்பிரச்சினைக்கு சுலபமாக தீர்வுகண்டார் இதுவே தற்பொழுது நடைமுறையில் உள்ளது. இச்சிறிய காற்றாடி உலங்கு வானூர்தியின் செல்லும் திசையையும் நிர்ணயிப்பதாக உள்ளது.

இன்று உலங்கு வானூர்திகள் பல்வேறு தொழில்நுட்ப முன்னேற்றங்களையும் பெற்றுச் சிறந்து விளங்குகிறது. இராணுவத்தேவைகளுக்கு மிகச் சிறப்பாகப் பணியாற்றுவதுடன் மக்களின் குறுகிய தூரப் பயணங்களில் குறிப்பிடத்தக்களவு பங்கையும் வகிக்கிறது.

# முகாரி பாடிய மங்களவாத்தியம்

மங்கள வாத்தியமொன்று என்மனதில் உருண்டது. மடியில் இருப்பது ஏன் என் மனதில் வந்தது? மடிவிட்டு ஓடி மறைய வந்ததுவா? அடிபட்ட வேகத்தில் அள்ளுண்டு என் அரவணைப்புத் தேடியதா? விரலைச் சுவைத்த வித்தையில் மயங்கி வழுவியதால் வந்து என்மனதில உருள்கிறதா?

நிதானித்து அதனை நெஞ்சின் அலையால் தொட்டு நிறுத்தினேன். எங்கிருந்து வந்தாய். நீ யார் உரிமை? ஏன் இந்த விசனம்? என்று கேட்டேன் என்னைத் தெரியாதா? கண்டிருப்பாய் ஆனால் கருத்தில் என் உருவத்தை இருத்தியிருக்கமாட்டாய். என்னைத் தனதாக்கி தான் நாளேயாகி அத்துவிதமாய் இரண்டற நின்று கையைப் பிசைந்து கலையாக்கி என்னைத் தூக்கித் தானும் உயர்ந்தவன்.

மேடைவிட்டுமேகம்தாவி புகழ் வெள்ளத்தில் நீச்சல் அடித்தவன். வித்தையின்எல்லா எல்லையும் தொட்டவன். விரிநீர் உலகத்தில் வீங்குபுகழ் பெற்றவன்: மேதை என்னும் பதாகை கண்டவன். மேதினி எங்கும் ஊர்வலம் போனவன். நின்றசீர் நெடுமாறனைக் கண்டதுண்டா? அவனை நான் அவனைக் காட்டுவேன். ஆள் கருப்புத்தான். அசைந்தால் அண்ணபிரான். ஆர்க்கும் கொடுப்பான் அவர் இவர் என்று பார்க்கான். ஆயகலைகள் அறுபத்துநான்கா? இவன் தாயநிலைகள் நூற்று இருபத்தெட்டு. சுற்றந் தழுவினான்; உற்றார் உறவுகள் பட்டத்தில் தானும் பங்கெடுத்த நின்றான், மக்களை மதித்தான். மண்ணை நேசித்தான். யாழ்ப்பாணம் 'தான்' என்று அரங்குகள் தோறும் வியக்கவைத்தான்.

இந்தியக் கலைஞர்கள் இவனை வந்தனஞ்செய்தனர். வந்து பார்த்தனர்.

மலேஷியாவை மலைக்க வைத்து மாலைகள் வாங்கினான்.

சிங்கப்பூரை சிறுவிரல்தட்டால் சிலிர்க்கவைத்தான்.

ஈழம் எங்கணும் இறும்பூதடைந்து இட்ட பட்டங்கள் பதித்தபதக்கங்கள் கலைமகள் கண்ட கவிபேருவகைகள்;

உள்ளத்தைச் சொல்வேன் என்னை உயரத்தில் தூக்கி வைத்தவன் இவனே இன்று தான் உருட்டிய மேளம். உன் இதயம் வந்து இருப்பிடம் கேட்கிறேன். இருக்கவில்லை; உருகி உன்னையும் உருக்கி அழுதுவிட்டுப்போக வந்தேன். என்னது? என். ஆர். சின்னராசா எமை விட்டு நீங்கிய செய்தியா சொன்னாய்! மங்களமும் முகாரி பாடுமா? நீதி நியாயங்கள் பாதி பாதியாய் வீதியில் கிடந்தால் மங்கள வாத்தியம் நீச பாஷை பேசுதல் வியப்பா?

"இந்த இசை இருக்கே இது எதையெல்லாம் கேட்கிறது! முதலில் சாதகம், பிறகு திறமை, அதன் பின் பக்தி, அதற்குமேல் அநுக்கிரகம். இதையெல்லாம் மீறி ஒருவன் வித்துவானாகி விட்டால் அவன் தேகத்தையே சாப்பிடுகிறது. ஏதோ இலட்சக்கணக்கில் சனங்கள் இசையை மெய்மறந்து அநுபவிக்கிறார்கள் என்றால் லேசான காரியமா?



தவில்வித்துவான்
இணுவையூர்
என். ஆர் சின்னராசா

இசைக்கலைஞன் தன் தேகத்தையே பிழிந்து துண்டந்துண்டமாக்கி சனங்கள்முன் இறைப்பது போலத்தான் அது இருக்கிறது? என்று யாரோ சொன்னது நினைவோசையானது.

பெயரில் சின்னராசாவாய் விளங்கி செயலில் சிங்கராசாவாய்த் திகழ்ந்த கலைஞானி கல்லைப் பிசைந்து கனியாக்குவது போல் தன்னைப் பிசைந்து கலையாக்கிய லயம் பித்தன். மேள வாத்திய மேதையை தெய்வ அநுக்கிரக வித்தையாய்ப்பெற்றவர். கால

புலவர்
ஈழத்துச் சிவானந்தன்

உளைய நின்றும் கழுத்துளைய இருந்தும் மக்களை மணிக்கணக்காய் மங்களவாத்தியக் கச்சேரியை அநுபவிக்கச் செய்த வித்தகுவித்தகன்.

வாழ இன்னும் வயதிருக்கிறது. காய இன்னும் காலமிருக்கிறது. காலனுக்கேதோ கண்ணை மறைத்ததா? எங்கள் கலைஞனை அவன் எடுத்தோடி விட்டான்.

## சந்ததி சரிதம்...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

புரியும் வயது கேட்டது,' ,எனக்கு ஏன் அப்பா இல்ல.'

'கடவுளிட்டப் போட்டார்' –அம்மாவின் வார்த்தைகள்; முதன்முதலில் அவ்விதமாய்த் தெரிந்தது.

ஊரின் வார்த்தைகள் வேறு விதம். கதைத்தது! பாவம் கனகலிங்கம்! அருமையான மனிதன்; எண்பத்துமூன்றில் இலங்கை இராணுவத்தின் கொடுமை. வலது காலைப் பறி கொடுத்தது போதாக்குறைக்கு எண்பத்தேழில் இந்திய இராணுவம் கொடுமையிலும் கொடுமை உயிரையும் பறிகொடுத்துது."

நினைவுக்கு வரும்போதெல்லாம் கதைத்தது அவ்வப்போது காதில் விழும். பாலகுகனுக்கு சரியாகத் தெரிய வந்தது. அம்மா முழுப் பொய். பொய் தான் சொன்னாள்;

அவனது அம்மாவுக்கு பெரும்பாலும் பொழுது வெளிமேல் வாழ்வாதாரம். இரண்டு வயிறுகளை ஒரு சந்ததியை வளர்க்கக் கூலி வேலை வீட்டில்] தங்கினால் புலம்பல். கணவனின் நினைவு. அரற்றுவாள். சற்றுத் தொடர ஆவேசம். மாரிப்] பொழிவாய் பொல்லாத சபிப்பு முகமறியாதவர்களுக்கு எல்லாம் சாபம் சிலபோது கடவுளுக்கும். பாலகுகன் மலைக்கப் பார்ப்பான். அப்பா கடவுளிடம் போகவில்லை கடவுள் நல்லவர். அம்மாதானே சொல்லித் தந்தது போயிருந்தால் பக்குவமாய்த் திருப்பி அனுப்புவார். பிறகு ஏன் அம்மா அழவேண்டும்? முழுப்பொய். ஊர்கதைப்பது தான்உண்மை அப்பாசெத்துப் போனார் ஆமி சுட்டுப்போட்டுது. ஆமி சுட்டா எவரும் சாவார்கள்.

அப்பா இறந்ததைச் சொன்னான். கூடவே வைதேகிக்கு காரணத்தையும் சொன்னான். கேட்டதும் கோபம் அச்சம் கலந்த கோபம் கண்களைப் பரக்க விழித்தாள் வைதேகி ஆமிக்காறர் பொல்லாதவங்கள் என்ன?''

ஆமோதித்தான் பாலகுகன் சடுதியாய் ஒரு உள்ளுணர்வு ஒன்றைச் சொல்லி விட வேண்டுமென்ற அருட்டல். "இனி எங்கள அவங்கள் சுடேலாது. எங்களுக்கு ஒரு மாமா இருக்கிறார் விடமாட்டார் வேற மாமாமாரும் அவருமா சுடல வெளியில சுட்டுப் பழகிறவ'.

3

பதிலுக்கு வைதேகி வாய் திறந்தாள் ஏதோ கேட்கும் எண்ணம் ஆனால் சடுதியாய் அடைத்தது சிலிபிடித்த அடைப்புவிரைந்து வந்த இரைச்சல் எண்ணத்தை விழுங்கிவிட்டது உச்சிக்கு மேலே உலோகக்கழுகுகள். பசிவெறி பிடித்த பேயிரைச்சல் குண்டுவீச்சு விமானங்கள் தாண்டிப்பறந்தன.

ஆசிரியை உன்னித்தார். சற்றுக் கணங்கள் இரைச்சலில் தன்மை மாறுபடுவதான பலப்பாடு. வட்டமிடுவதற்கான அசுமாற்றம். இதயத்தின் மேல் பாறாங்கல்லாய் விழுந்தது திகில். பதறியடித்து எழுந்தார். குழந்தைகள் இருவரினதும் கைகளைப் பற்றிக் கொண்டு ஓரேதாவு. முற்றத்தின் ஓரத்தில் பரந்த கிளைகளுடன் ஒரு வேம்பு. அடியில் பதுங்கு குழி. குழந்தைகளைத் திணித்து தானும் புகுந்து கொண்டார்.

சற்று நிமிடங்களில் வளிமண்டலமெங்கும் அதிர்வு. 'மளார் மளார்' என்று வெடியதிர்வு. குண்டு முட்டைகளை இட்டுத் தள்ளுகின்றன. கருக்கட்டா முட்டைகள் - கருவழிக்கும் முட்டைகள்! பக்கமல்ல சற்றுத்தொலைவுதான். ஆனாலும், பதுங்கு குழிக்குள்ளும் லேசாய் அதிர்ந்தது. அழுக்கமான அதிர்வு.

வீட்டில் வேறுயாருமில்லை. அப்பாவும், அம்மாவும் அவசர அலுவலாக வெளியில் தங்கைகள் இரண்டு பேரும் படிப்பு சம்பந்தமாக வேறொரு தி

(7 ஆம் பக்கம் பார்க்க)

## அமிரின்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

லிங்கம்வரை நூற்றுக்கும்அதிகமான இனத்துரோகிகள் இதுவரை தண்டிக்கப்பட்டுள்ளனர் ஒரு காலத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதியாக இருந்து 1970இல் மக்களால் தோற்கடிக்கப்பட்டு. அதன் பின் 1977இல் சுயநலத்துக்காக, பதவி நாற்காலிக்காக தமிழீழக் கோஷத்தை முன்வைத்து தேர்தலில் வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினரான அமிர்தலிங்கம் தமிழீழப் போராட்டத்துக்கும், ஈழத் தமிழர்களுக்கும் செய்த துரோகங்கள்தான் மிகப் பெரியவை.

ஜே ஆரின் ஏமாற்றுவித்தையான மாவட்ட அபிவிருத்திச் சபையை ஏற்கவேண்டாமென தமிழ்மக்கள் மத்தியில் எதிர்ப்புக் கிளம்பியபோது அதனையும் மீறி மாவட்ட அபிவிருத்திச் சபைகளை ஏற்றுக்கொண்டவர், பின்பு காலகதியில் தெருக்கூட்டும் அதிகாரம்கூட அதில் இல்லையென வாயைப் பிளந்தவர் அமிர். மாவட்ட அபிவிருத்திச்சபையில் எவ்வித அதிகாரமும் இல்லையென்பது அமிருக்கு முதலே தெரியும். ஆனால் அவர் ஜே. ஆருடன் கூட்டுச்சேர்ந்து மக்களை ஏமாற்றி நாற்காலியில் அமர முனைந்தார். ஆனால் நடைமுறையில் அது பிசுபிசுத்து மக்கள் மத்தியில்எதிர்ப்புவளரவே அந்த மக்கள் உணர்வுக்கஞ்சி மீண்டும் ஏமாற்றும் நோக்குடன் அதிகாரமற்றதென்பதை ஒப்புக்கொண்டார்.

அமிரின் பதவிவெறிக்கு ஒரு சிறந்த உதாரணம் 1989ஆம் ஆண்டுபொய்ப் பொதுத்தேர்தலில் அவர் பங்கெடுத்துக் கொண்டமையும், அத் "தேர்தலில்'' மக்களால் நிராகரிக்கப்பட்ட நிலையில், அவர் கூட்டுச்சேர்ந்திருந்த ஈ பி, ஆர்.எல் எவ் குழுவே அவர் பாராளுமன்றம் செல்ல அருகதையற்றவர் எனத் தடுத்தபோதிலும், உதயசூரியன் சின்னத்தின் கீழ் போட்டியிட்டமையால், அதற்கான உத்தியோகபூர்வ பதிவு கூட்டணியில் இருந்தமையால் தேசியப் பட்டியலின் அடிப்படையில் தனதுபெயரை பாராளுமன்ற உறுப்பினராக அமிர் ஆக்கிக்கொண்டார். இதனைக் கலாபூர்வமாக பின்வருமாறு கூறுவதுமுண்டு. அதாவது;

1989 பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மக்கள் அமிருக்குப் பாராளுமன்றத்தின் முன் கதவை அடைத்தனர். அவரது சகாக்களான ஈ.பி ஆர்.எல்.எவ் குழுவினரே அவருக்குப் பின் கதவையும் அடைத்தனர். ஆனால் அமிரோ தேசியப் பட்டியல் எனும் கருவியின் மூலம் பாராளுமன்றக் கூரையைப்பிடித்துக்கொண்டுஉள்ளே கதிரையிற் பாய்ந்தார்.

"ஆறாவது திருத்தச் சட்டத்தின் கீழ் தேர்தலில் போட்டியிட மாட்டோம். 1977இல நாம் மக்களிடம் பெற்றுக்கொண்ட ஆணைக்கு அது முரணானது தமிழ் மக்கள் தமது இறைமையை முழுமையாகப்பிரயோகிக்கக்கூடிய தேர்தலிலேயே பங்கு பற்றுவோம்.'' என்று கூறியிருந்த அமிர்தலிங்கம் எப்படி ஒரு பாராளுமன்றக் கதிரைக்காக அலைந்திருக்கின்றார்என்பதை பார்க்கும் போது அவரது அரசியல் உள்நோக்கம் என்ன என்பது தெளிவாகத் தெரிகின்றது.

மேலும் அமிர் பத்திரிகைப் பேட்டிகளின் போது அவ்வப்போது கூறிய சில வாக்கியங்களையும் நோக்குதல் பொருந்தும்.

"தமிழ் இளைஞர்கள் மனதில் தளர்ச்சி உண்டாவதற்குரிய சகல முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறோம்.'' (தஐலண்ட் பத்திரிகைக்கான பேட்டி) இலங்கை -- இந்திய ஒப்பந்தம் ஏற்பட்ட பின்பு போராளிகளின் நிலை எப்படி இருக்கும் எனப் பத்திரிகையாளர் கேட்டபோது அமிர்,

"அவர்கள் போராட்டத்திற்கு வருவதற்கு முன் செய்த பழைய தொழில்களைச் செய்வார்கள் படிப்பை நிறுத்தியவர்கள் படிப்பைத் தொடர்வார்கள்.'' என்றார்.

ஐ பீ.கே.எப்இன்இராணுவ நடவடிக்கைகள் பற்றிக்கேட்ட போது.

"ஐ பி.கே.எப். றப்பர்குண்டுதான் அடிக்கிறது என்று கூறினார். ஒ றப்பர் குண்டு அடித்தா 6000 பேர் இறந்தனர்!!"


A/L 92
தாவரவியல்
திரு. பொ. ஐங்கரநேசன்
புதிய பிரிவுகள்
ஆரம்பம்
14 - 7 - 91 (ஞாயிறு)
காலை 6-7 தாவர உடற்றொழிலியல்
காலை 7-8 தாவர இரசாயனத்தின் பிரிவினைகள்
பிற்பகல் 2-3 தாவர உடலமைப்பியல்
யூனிவேர்சல்
கந்தர்மடம் — யாழ்ப்பாணம்
(B/2797)

உலகம் முழுவதுக்குமான
DHL WORLDWIDE EXPRESS
துரித
தபால் சேவையை
நாம் நடாத்தி வருகின்றோம்.
எமது புதிய முகவரியில்
உங்கள் கடிதங்களை ஒப்படையுங்கள்
DHL INTERNATIONAL
C/o. COSMOS MARKETING SERVICES,
120, K. K. S Road, JAFFNA.
(B2770)

# நெருக்கடியின் விளிம்பில்

# இந்திய சுய சார்பு பொருளாதாரம்

பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ள இந்தியப் பொருளாதாரத்தை சீரமைக்கும் முயற்சியில் இந்தியாவின் புதிய நிதி அமைச்சர் பேராசிரியர் மன்மோகன்சிங் தீவிர நடவடிக்கைகளை எடுத்துள்ளார் இதன் பிரகாரம் இந்தியாவின் பணப் பெறுமதி மூன்று நாட்களுக்குள் இரண்டு தடவைகள் இறக்கம் செய்யப்பட்டது. இப்பணப் பெறுமதி இறக்கம் அமெரிக்க டாலருக்கும் பிரிட்டன் ஸ்ரேலிங் பவுணுக்கும் எதிராக இந்திய நாணயத்தைப் பத்தொன்பது வீதம் வீழ்ச்சியடையச் செய்தது.

இப்பணப் பெறுமதி இறக்கம் இந்தியாவில் முதலீடு செய்துள்ள இந்தியாவிற்கு வெளியில் வாழும் இந்தியர்களுக்கு இந்தியப் பொருளாதாரத்தில் நம்பிக்கை ஏற்படுத்தவும், அவர்கள் தமது முதலீடுகளை விலக்கிக்கொள்ளாமல் இருப்பதற்கும், இந்திய ஏற்றுமதி வருவாயை அதிகரித்து அந்நியநாட்டுச் செலாவணி வருவாயை அதிகரிக்கும் எனவும் இந்திய நிதி அமைச்சகம் கருதுகின்றது.

மேலும் பொருளாதாரத்தைச் சீர்படுத்தும் நோக்கமாக வட்டி வீதங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதோடு ஏற்றுமதிக்கான ரொக்கப் பணக் கொடுப்பனவுகளும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

## கண்டனங்கள்

இந்தியாவில் தற்பொழுது தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுவரும்பொருளாதாரச்சீர்திருத்தத்தினை எதிர்க்கட்சிகள், புத்திஜீவிகள் கைத்தொழிலதிபர்கள் பலர் வரவேற்றுஉள்ளனர். சிலர் எதிர்த்துமுள்ளனர். அரசியற் கட்சிகளைப் பொறுத்த பெரும்பாலானவை குறை கூறியுள்ளன. சர்வதேச வங்கிகளும் உலக வங்கியும் இந்தியா முற்று முழுதாக அடைவு வைக்கப்பட்டுள்ளது என மாக்சிஸ கம்யூனிஸ்ட்கட்சியின் முக்கிய உறுப்பினரான ஹரிகி ஷோர்சிங் குறிப்பிட்டார்.

இந்தியாவின் நாணயப்பெறுமதி இறக்கம் சர்வதேச நாணய நிதியத்தின் வற்புறுத்தலின் பேரில் மேற்கொள்ளப்பட்டதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்களை இந்திய நிதியமைச்சர் முற்று முழுதாக மறுத்துள்ளதோடு தேவை கருதிச் செய்யப்பட்ட சீர்திருத்தம் எனக் கூறுகின்றார். நிதியமைச்சர் மன்மோகன் சிங் சிறந்த பொருளாதார நிபுணர். இந்தியாவின் பொருளாதாரத்திற்கு உடன் புத்துயிர் அளிக்க வேறு வழியில்லை என்ற ரீதியிலேயே இவ்வாறு மேற்கொள்ளப்பட்டது என்பதை இந்தியாவின் பொருளாதார நிலையை அவதானிப்பின் தெரியவரும்.

## மூன்றாவது பெரிய கடன்கார நாடு

இந்தியா உலகில் உள்ள மூன்றாவது பெரிய கடன்கார நாடு, பிரேசில், மெக்சிக்கோ என்பனவற்றிற்கு அடுத்தபடியாக இந்தியா பெருந்தொகையான கடனை உலக நாடுகளிடம் இருந்து பெற்றுள்ளது. அதன் கடன் சுமார் 7000 கோடி டாலராகும் அத்தோடு ஒரு மாதத்திற்கான கொள்வனவுகளைச் செய்வதற்குக் கூட இந்தியாவிடம் அந்நியச் செலாவணி கையிருப்பில் இல்லை இடைக்கால சந்திரசேகர் அரசாங்கம் கடனைத்திருப்பச்செலுத்துவதற்காக 20 தொன் தங்கத்தை பெயர் குறிப்பிடப்படாத வங்கி ஒன்றிடம் 6.3 வீதவட்டியில் அடைவுவைத்து 20 கோடி டாலர்களைக் கடனாகப் பெற்றது. இத்தங்கம் விற்கப்பட்டதாகவும் சிலர் குறிப்பிடுகின்றனர்.

அதேபோன்று தற்பொழுது பாங் ஒவ் இங்கிலாந்து, பாங் ஒவ் ஜப்பான் ஆகியவற்றில் இருந்து 45 கோடி டாலர் இடைக்காலக் கடனுதவியைப் பெற இந்திய ரிசேவ்வங்கி தனது கையிருப்பில் இருந்து 25 தொன் தங்கத்தை இருவிமானங்களில் இங்கிலாந்திற்கு அனுப்பியுள்ளது பின்னர் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பெறப்படும் கடனில் இருந்து மீட்டுவிடலாம் எனத் தெரிவிக்கின்றது.

இந்தியப் புதிய அரசாங்கத்தின் இப்புதிய சீர்திருத்தம் வெற்றி அளித்திடும் என்றும் இந்தியா பொருளாதார நெருக்கடியில் இருந்து நீங்கிவிடும் என கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்ற போதிலும், அது சாத்தியப்பாடான விடயம ? என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளது.

## ஏற்றுமதியில் வருவாய் அதிகரிக்குமா?

தீவிர பொருளாதாரச் சீர்திருத்தத்தில் இறங்கியுள்ள இந்தியநிதி அமைச்சகம்இதன் மூலம் ஏற்றுமதி அதிகரித்து அந்நியச் செலாவணி அதிகரிக்கும் என எதிர்பார்க்கின்றது ஆனால்இப்பணப்பெறுமதி இறக்கத்தின் மூலம் இந்தியாவில் இருந்து பெரும்பாலும் விவசாயப் பொருள்களின் ஏற்றுமதியே அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. தேயிலை, பருத்தி போன்றவற்றின் விலையில் ஏற்படும் வீழ்ச்சியினால் அப் பொருள்களின் ஏற்றுமதி அதிகரிக்கலாம் ஆனால் இவ் விவசாயப் பொருள்களின் ஏற்றுமதி அதிகரிப்பால் பெருமளவு அந்நியச் செலாவணிகள் கிடைப்பதற்கான வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன.

ஏனெனில் அன்று போலவே இன்றும் சர்வதேச சந்தைகளில் விவசாயப் பொருள்களின் விலைகள் பெரும் தளம்பல் கொண்டவையாகவும், நம்பிக்கைத் தன்மை அற்றவையாகவுமே உள்ளன. இதன் காரணமாக மூன்றாம் உலக நாடுகள் பொதுவாகவே பெரும் நெருக்கடிகளுக்கு உள்ளாகின்றன. இந் நிலையில் இந்தியாவின் இவ் ஏற்றுமதி அதிகரிப்பால் எந்த அளவில் நன்மை அடைய முடியும் என்பது கேள்விக்குரியதே;

> இந்திய நிதி அமைச்சரான பேராசிரியர் மன்மோகன் சிங்கிற்கு பணப் பெறுமதியை இறக்குவதைத் தவிர வேறுவழியே தெரியவில்லை. இந்தியாவின் கையிருப்பில் ஒருமாத கொள்வனவிற்குக் கூட அந்நிய நாட்டுச் செலாவணி கையிருப்பில் இல்லை. சர்வதேச நாணய நிதியத்தை எதிர்பார்த்தே நாற்பதாண்டு இந்திய சுயசார்புப் பொருளாதாரம் இன்று நிற்கின்றது.

## கைத்தொழிற்பொருள்கள் போட்டியிடுமா?

அதேவேளை கைத்தொழிற் பொருள்களின் ஏற்றுமதி அதிகரிப்பை ஏற்படுத்தலாம் என்ற எதிர்பார்க்கையும் வெற்றி அளிக்குமா என்பதுசந்தேகமே ஏனெனில் இந்தியா, சோவியத் யூனியன் போன்ற நாடுகளின் கைத்தொழிற் பொருள்கள் சர்வதேச சந்தையில் போட்டியிடும் தரத்தைக் கொண்டவையாக இல்லை. இதற்கான உயர் தொழில்நுட்பம் இந்நாடுகளில் இல்லை: ஜப்பான் போன்ற நாடுகளின் பொருள்களைக்காட்டிலும் குறைந்த விலையிலும், அழகான முடிவுடனும் வரும் ஜப்பான் பொருள்களுடனும், நீண்டகாலப் பாவனைக்கும், சற்று அதிகரித்த விலையுடனும் வரும் அமெரிக்க, ஐரோப்பிய பொருள்களும் சர்வதேச சந்தையில் இந்தியப் பொருள்கள் போட்டி போட முடியுமா என்பது பிரச்சினைகளுக்குரியதொன்றேயாகும்.

மேலும் இறக்குமதிப் பொருள்களின் விலை அதிகரிப்பில் ஏற்படும் உற்பத்திச் செலவு அதிகரிப்பும் உற்பத்திக்கான ஊக்குவிப்பாக அமையுமா என்பதும் விவாதத்திற்குரியதே.

இந்நிலையில், கைத்தொழிற் பொருள்களின் ஏற்றுமதியை அதிகரிப்பதென்றால் சிறிலங்கா, சிங்கப்பூர் போன்ற நாடுகள் மேற்கொள்ளும் தைத்த ஆடைகள் ஏற்றுமதி பாரம்பரிய மற்ற பொருள்கள் ஏற்றுமதி என்பனவற்றில் இந்தியா கவனம் செலுத்தலாம். ஆனால் பரந்த இந்தியாவின் பொருளாதாரத்திற்கு இன்று சந்தையில் 'கோட்டா' முறைக்கு உள்ளாகியிருக்கும் அவ்வகைத்தொழிற் பொருள்களின் ஊக்குவிப்பால் பெரும் நன்மை ஏற்படும் என்று சொல்லிவிடமுடியாது. ஆனாலும் இவ்வர்த்தகம் கடும் போட்டியில் இருப்பதனால் எதிர்பார்க்கும் வருவாயை ஈட்டமுடியாது.

அதேவேளை இந்தியப் பொருளாதாரச் சீர்திருத்தத்தைக் குறை கூறிய சிலர் பணப் பெறுமதி இறக்கத்தைத் தவிர்த்து பெரும் திட்டங்களுக்கான செலவீட்டைக் குறைத்து பொருளாதாரச் சீர்திருத்தங்களை மேற்கொண்டிருக்கலாம் எனக் கருத்துக் கூறியுள்ளனர்,

## வேறுவழி இல்லை

ஆனால், இன்றைய இந்தியாவின் பொருளாதார நெருக்கடிக்கு நிதி அமைச்சர் மன்மோகன் சிங்கின் நடவடிக்கைகளை விட வேறு உடனடியாக மேற்கொள்ளக்கூடிய சிறப்பான நடவடிக்கைகளுவும் இருப்பதாக தெரியவில்லை; மன்மோகன்சிங்கின் நடவடிக்கை முழுமையாக இந்தியாவின் பொருளாதார நெருக்கடிகளைத் தீர்க்காமல் விட்டாலும் சற்றுத் தணிய வைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது

ஆனால், இந்தியா சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்தும், உலக வங்கியிடம் இருந்தும் எதிர்பார்க்கும் பல நூறு கோடி டாலர் அத்தியாவசிய உதவி கிடைக்கும் பட்சத்திலேயே இது சாத்தியப்படக் கூடியதாகும். சர்வதேச நாணய நிதியத்தின் கோரிக்கைகளை ஏதோ ஒரு வகையில் இந்தியா நிறைவேற்றினும், சர்வதேச நாணய நிதியமும், மேற்குலகமும் எதிர்பார்த்த உதவியை திட்டவட்டமாக அளிக்கும் என்றும் சொல்வதற்கில்லை.

எடுத்துக்காட்டாக சோவியத் யூனியன் பொருளாதாரச் சீர்திருத்தங்களை படிப்படியாக மேற்கொண்டு வந்த போதிலும்மேற்குலகம் சோவியத் யூனியன் எதிர்பார்த்த உதவி எதையும் அளிக்க முன்வரவில்லை. வருடாந்தம் 5000 கோடி டாலர் வீதம் சுமார் ஐந்து வருடங்களுக்கு 25,000 கோடிடாலரை சோவியத் யூனியன் எதிர்பார்த்து இருக்கின்ற போதிலும் உதவிகள் வழங்குவதை மேற்குலகம் இன்னும் ஆரம்பிக்கவில்லை. உதவி வழங்கச் சாக்குப் போக்குச் சொல்லி வருகின்றன. சந்தைப் பொருளாதார அமைப்பிற்கு சோவியத் இன்னும் மாறவில்லை. அரசியல் மாற்றங்கள் போதாது. மேலும் செய்தல் வேண்டும் எனவும் தெரிவித்து வருகின்றன

மேற்குலகத்தின்இப்போக்கை கண்டனம் செய்துள்ள சோவியத்புலனாய்வுத்துறைத் தலைவர் விளாடிமீர் கிரியுச்சோவ் அமெரிக்க சி ஐ ஏ யின் சோவியத் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கச் சதி செய்து வருகின்றது. சோவியத்திற்கு மேற்கு நாடுகளின் உதவி கிடைப்பதற்கான உத்தரவாதம் எதுவுமில்லை. அது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளுதல் ஆகும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேற்குலகத்தைப் பொறுத்தும் சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றைப் பொறுத்தும் சோவியத் யூனியனுக்கும் இந்தியாவிற்கும் அணுகுமுறை ஒன்றாக இல்லாவிடினும் அவற்றின் இலக்குகள் ஒன்றே. இந்நிலையில் திட்டவட்டமாக எதிர்பார்க்கும் உதவிகள் கிடைத்துவிடும் என்று சொல்வதற்கில்லை.

எது எவ்வாறு இருப்பினும் எழுபது வருடமாக சோவியத் யூனியனால் கட்டிக் காக்கப்பட்டு வந்த சோசலிஸ பொருளாதார அமைப்பும், நாற்பது வருடங்களுக்கு மேலாக இந்தியாவில் தீவிரமாகக் கடைப்பிடிக்கப்பட்டுவந்த சுயசார்பு கலப்புப் பொருளாதார அமைப்பும் பெரும் நெருக்கடியின் விளிம்பில் உள்ளன.

இந் நாடுகளின் பொருளாதாரத் தேக்கவிக்கு அக் கொள்கைகள் காரணம் இல்லாமலும் இருக்கலாம் நடைமுறை படுத்தியவர்களின் தவறுகள் கூட காரணமாக இருக்கலாம்; ஆனால் இன்று இந்நாடுகளில் மேற்கொள்ளப்பட்டுவரும்சீர்திருத்தங்களும் இந்நாடுகளின் தற்போதைய பொருளாதார நெருக்கடிகளைத் தீர்த்துவிடும் என்பதற்கில்லை ஏனெனில் உலக சந்தைப் பொருளாதாரம் இன்று மேற்குலகத்திற்கு சாதகமாகவே உள்ளது அதில் மாற்றம் ஏற்படும்வரை இந்நிலையில் மாற்றம் ஏற்பட முடியாது.

ஜெயா

---

## விழுதுகள்

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

படைக்கப்பட்டது: ஒருதேசிய விடுதலை இயக்கத்தின் வெற்றிக்கு சரியான தலைமை, தியாக உணர்வு என்பனவற்றுடன் தகவல் தொடர்பு உளவு என்பனவும் முக்கியமானவையாகும். இந்த இரண்டிலும் அந்த விடுதலை இயக்கம் போதுமான வளர்ச்சியைப் பெற்றிருக்கா விடின் விடுதலை விரைவுபடுத்தப்பட மாட்டாது: இப்படியான பொறுப்பு மிக்க பணிக்கு இவன் நியமிக்கப்பட்டதிலிருந்து இவன் மீது இயக்கத் தலைமை கொண்டிருந்த நம்பிக்கையை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

எங்கள் தேசிய இன விடுதலையை தமது சொந்த நலனுக்காக விற்ற துரோகிகளுக்கான தண்டனை வழங்கப்பட்டேயாக வேண்டும்.

இவர்களுக்கானதண்டனையை விரைவுபடுத்தாவிடில் தமிழீழ மண்ணில் மரணங்கள் தொடர்கதையாக இருக்கும்; எனவே "புலை போகாத இடமெல்லாம் புலி போகும்" என்ற புதுமொழியை நிரூபிக்கப் புறப்பட்டான் விசு.

இப்பணியை மேற்கொள்ளும்போது தான் திரும்பி வர முடியாது என்று இவனுக்கும் இவனது தோழர்களுக்கும் நன்றாகவே தெரியும். அப்படியிருந்தும் துரோகிகளைத் தேடிச் சென்றனர். அங்கே "இத்தாலிய இளைஞர்களை கரிபால்டி அழைத்ததுபோல இங்குள்ள இளைஞர்களை நான் அழைக்கிறேன்" என்று முழக்கமிட்ட அமிர்தலிங்கம் சிங்களச் சிப்பாய்களின் துப்பாக்கிகளில் நம்பிக்கை வைத்தபடி......

எந்தப்படையென்றாலும், எந்த நாரமென்றாலும் புலியின் கடமை ஒன்று நிறைவேற்றப்பட வேண்டுமாயின் அது நிறைவேறியேயாகும். எனவே விசுவினதும் தோழர்களினதும் துப்பாக்கிகள் உயர்ந்தன.

தனிநாட்டுக் கோரிக்கை தற்கொலைக்கு ஒப்பான செயல் என்று ஒரு காலத்தில் கூறியவருக்கு தனிநாட்டுக்கான போராட்டத்தை காட்டிக் கொடுப்பது தற்கொலைக்கொப்பானது. துரோகத்தனமானது என்று வரலாறு கூறிற்று;

"துரோகத்துக்குப் பரிசு" என்ற பிரசுரம் கையில் கிடைத்ததன் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்பு கொண்ட விசு துரோகத்துக்குப் பரிசு கொடுத்தபின் தன்னை இந்த மண்ணுக்குக் கொடுத்துக் கொண்டான் கூடவே அவனது தோழர்கள் இருவரும்.

---

## சந்ததி சரிதம்

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

கில் ஆசிரியைக்கு கவலை தொட்டது. எங்கு நிற்கிறார்களோ! பாதுகாப்பாய் இருப்பார்களோ! குண்டு வீச்சுப் பகுதிக்குள் சிக்கிக் கொண்டிருப்பார்களோ!

இன்னமும் அதிர்ந்தது. கணப்போது இடைவெளிகளு

டன் தொடர்ச்சியான அதிர்வு. வைதேகி மிகவும் பீதியடைந்தாள். நெஞ்சக் குழியுள் பதற்றம். பாலகுகனுக்கும்பயமாய்த்தான் ஆனாலும், அந்தளவு தூரமில்லை. ஒரு ஓரத்தில் அவன். மறு ஓரத்தில்ஆசிரியை. அவன் நடுவில் இருவரது கைகளையுமே அவன அவைகள் இறுகப் பற்றியிருந்தன. ஆனாலும் உதறல், அழுகை அழுகையாய் வந்தது அழவும் செய்தாள். விசும்பல் "ரீச்சர்என்ன விட்ட கொண்டுபோய் விடுவியோ!"

தொடர்ச்சியாய் விசும்பல் திரும்பத் திரும்ப வேண்டினாள். தன் கவலையை ஓரங்கட்ட வேண்டிய தேவை ஆசிரியைக்கு அவளைத் தேற்ற முயன்றார். இயன்றவரை முயன்றார். பார்க்கப் பார்க்க பாலகுகனுக்கும் அழுகை வரும் போல தான் உள்ளுக்குள் விசும்பியது. ஆனாலும் வெளிப்படவில்லை.

அரைமணி நேரம் விமானங்கள் திரும்புகின்ற போன்ற

புலப்பாடு ஆசிரியை உன்னித்தார்; திரும்பத் தான் செய்கின்றன. ஆறோ, ஏழோ போட்டுத் தள்ளிவிட்டான் எத்தனை வீடுகள் தகர்ந்தனவோ! எத்தனை மனித உடல்கள் சிதறினவோ!

கழுகுகள் வந்த வழியே திரும்பிப் பறந்தன. வயிற்றை நிரப்பிக் கொண்ட திருப்தி இரைச்சலில் குழிகளுக்குள் பதுங்கியிருந்த மனிதக் குரல்கள் ஆங்காங்காய் வெளிப்பட்டன. அண்டை அயல் ஆரவாரத்தின் மெல்லத் தளையுடைப்பு. ஆசிரியையும் புலுணர்வு; வெளியில் வந்தார். குழந்தைகள் பின் பற்றின பதுங்கு குழி

(8 ஆம் பக்கம் பார்க்க)

கண்ணிவெடி விதைக்கப்பட்ட

# நீண்ட வெளியைத் தாண்டி முகாமை அடைந்தோம்

## காயமடைந்த போராளியின் பேட்டி

'பத்துத்தரம் மண் மூடை அடுக்குவதற்குள் ஒருவர் காயப்பட நேர்ந்தது. பரா லைற்றடித்தபடி பொம்மர், ஹெலி, அவ்ரோ என்பன இடைவிடாத தாக்குதலை நடத்திக்கொண்டிருந்தன. இவற்றின் மத்தியிலேயே கண்ணிவெடிகள் விதைக்கப்பட்டிருந்த நீண்ட வெளியைத் தாண்டி சுற்றுலா முகாமைக் கைப்பற்றினோம். எமது தாக்குதலின் உக்கிரத்தைத் தாக்குப்பிடிக்க முடியாத இராணுவம் நேற்று அதிகாலை 12.30 அளவில் தமது முகாமுக்குத் தலை தெறிக்க ஓடியது' இவ்வாறு கூறினர் ஆனையிறவு உப்பளசுற்றுலா விடுதித் தாக்குதலில் பங்கு பற்றி தனது வலது காலை இழந்துள்ள மதீனா என்ற பெண் போராளி எமது நிருபரிடம் தெரிவித்தார். இவருடன் இத்தாக்குதலில் ஈடுபட்ட பெண் போராளிகளான றெஜீனா, சுமதி, றேசா ஆகியோரும் தமது கால்களை இழந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் முள்ளுக்கம்பி வேலிக்குள் மட்டுமல்ல ஆங்காங்கே 10 அல்லது 15 யாருக்கொன்றாக மிதி வெடிகள் புதைக்கப்பட்டிருந்தன. கண்ணிவெடிகளை அகற்றியபடியே எமக்கு காப்பரணாக நாம் கொண்டுசென்ற மண் மூடைகளையும், குத்திகளையும் உருட்டியபடியே தான் அந்தப் பரந்த வெளியைக் கடந்துசென்றோம்.

''கடந்த புதன்கிழமை (10-ம் திகதி) நடக்க இருந்த இந்த தாக்குதலுக்காக கடந்த சனிக்கிழமையே (6 ஆம் திகதி) புறப்பட்டுவிட்டோம் மணித்தியாலக்கணக்கான நடைக்குப்பின்னரே தாக்குதல் ஆரம்பிக்க வேண்டிய இடத்தைச்சென்றடைந்தோம். அன்றிலிருந்து புதன்கிழமை வரை அங்கேயே இருந்தோம். செவ்வாயன்று இத்தாக்குதலைமேற்கொள்ள முன்னர் பீரங்கித்தாக்குதல் இடம்பெற்றது தாக்குதல் தொடங்கியதும் காயமடையும் அல்லது மரணமடையும் குழுவுக்குப்பதிலாக அடுத்த குழு தயாராக இருந்தது. அதைவிட காயமடைந்தவர்களை அப்புறப்படுத்தவும் தனிக்குழுக்கள் இருந்தன. இத்தாக்குதலில் ஈடுபட்ட ஒவ்வொரு போராளியும் மிகவும் கஷ்டமான நிலையிலேயே, எமக்குச் சாதகமில்லாத புவியியல் சூழ்நிலையிலேயே தாக்குதலை மேற்கொண்டபடி முன்னேறினர்' என்றார்.

''முகாம் புலிகளின் கையில் வீழ்ந்ததும் உங்கள் உணர்வுகள் எப்படி இருந்தது என்று கேட்டபோது மேலும் மேலும் முன்னேற வேண்டும் என்ற உணர்வே ஏற்பட்டது என்றார். உங்களுக்கு இந்தச் சம்பவம் எப்படி ஏற்பட்டது என்று கேட்டதற்கு ''காயமடைந்த போராளியொருவரை தூக்கி வைத்து விட்டு நடந்த போதே மிதிவெடியில் சிக்கினேன் இரவு ஒரு மணியளவில் மிதி வெடியில் சிக்கியும் 15 நிமிடத்திற்குப் பின்னரே என்னைத் தூக்க முடிந்தது மற்ற முகாமிலிருந்து இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலும், விமானத்தாக்குதலும் என்னை மீட்டுக் கொண்டு வரும் பணியைத் தாமதிக்க வைத்தது என்றார். இத்தாக்குதலில் வீரமரணமடைந்த போராளிகளின் பெயரைக் குறிப்பிட முடியுமா என்று கேட்டதற்கு ''வாகினி என்ற போராளியை மட்டுமே எனக்குத் தெரியும்'' சண்டையின் உக்கிரத்தில் ஏனையவர்களைக் காண சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்றார்.

இந்தத் தாக்குதல் பற்றி வேறு என்ன கூற விரும்புகிறீர்கள்? என்று கேட்டதற்கு மிகவும் கஷ்டமான நிலையிலேயே இந்தத் தாக்குதலை மேற்கொண்டோம் இந்த ஒரு முகாமையும் கைப்பற்றினோம் நாம் முழுமையாக இதனைக் கைப்பற்றப் போவது நிச்சயம் என்று உறுதியுடன் கூறினார் மதீனா.

---

சந்ததி சரிதம்

வாயிலிருந்து ஒவ்வொருவராய்த் தூக்கிவிட்டார்.

4

சற்றைக்கெல்லாம் வைதேகியின் அம்மா வந்து நின்றாள் பதறியடித்துப் பறந்து வந்தாள் இரண்டு கண்களும் பரக்க விரிந்து கிடந்தன. துளாவித் தேடின குழந்தையை பதற்றத்தின் பறப்பின் விளைவுத் துளிகள் முகமொங்கும். உடலிலும் பதற்றம் கண்ட மாத்திரத்திலேயே அம்மாவிடம் ஓடினாள் வைதேகி. கைகளைப் பற்றிக் கொண்டாள்.

பாலகுகனின்பார்வைஅவள் வசமின்றியே தெருவிற்கு பூமொட்டுக் கண்கள் தேடின. அவனது அம்மா வந்திருக்கவில்லை. பக்கத்திலிருந்தால் இந்நேரம் அவளும் நிற்பாள். கூலிக்கு மாரடித்துக் கொண்டிருப்பது எந்தத் தொலைவிலோ? அவனது பார்வை மீண்டும் இங்கு.

வைதேகியிடம் இப்போது அழுகை இல்லை. சற்று முன்பாக நின்று விட்டது. சரியான நிதானம்தான் இன்னமும் வரவில்லை. பீதியின் எச்சசொச்சம் இதயத்துள். முகக் கூறுகளில் புலப்பட்டது அம்மா புரிந்துகொண்டாள், மகளைக் கண்டதில் நிம்மதி. ஆனாலும் உள்மனப்பதற்றம் உடனடியாகத் தணியவில்லை. குழந்தையைத் தேற்ற வேண்டும். முதலில் தன்னை நிதானப்படுத்திக்கொள்ள வேண்டுமே? முனைந்தாள். குழந்தையின் முகத்தை இருகைகளிலும் ஆதரவாய் ஏந்தி வருடினாள் என்னம்மா, பயந்துபோனியளே?'

ஒப்புக்கொண்டாள் வைதேகி. 'ஓமம்மா, சரியாய்ப் பயந்துபோனன்' குரலில் நடுக்கம்.

சற்றுக் கண இடைவெளி.

"அப்பா இருந்திருந்தா இப்பிடிப் பயப்பிட மாட்டன்!"

பாலகுகனும் உத்துக்கல் பார்த்துக்கொண்டுதான் நின்றான் ஏதோ வித உத்வேகம் சொன்னான். 'நான் பயப்படயில்லை. ஏனெண்டா எங்களுக்கு ஒரு மாமா இருக்கிறார்.'

அம்மா அவனை உன்னித்தாள், அவளுக்குப் புரிந்தது □

---

### விசேட

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக் கழகத்தின் அனைத்துப் பீடங்களினதும் மாணவர்களுக்கான விசேட பொதுக்கூட்டம் ஒன்று இன்று காலை 10.00 மணிக்கு கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. எனவே அனைத்து பீட மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு மாணவரவை வேட்டுக்கொண்டுள்ளது.

---

உப்பள

ஆனையிறவு உப்பளம் முகாமின் ஒரு பகுதியான உல்லாசப் பயணிகள் விடுதியைத் தாக்கினர் சுமார் ஒரு மணி நேரம் மட்டும் நீடித்த இத்தாக்குதலின் பின் உல்லாசப் பயணிகள் விடுதி புலிகளிடம் வீழ்ச்சி அடைந்தது

இத் தாக்குதலின் போது பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தவர்களையும் தூக்கிக் கொண்டு உப்பள முகாமின் பிரதான பகுதிக்கு ஓடி விட்டனர்

---

2 உலங்குவானூர்தி

நடத்தி வருகின்றன. சிறிலங்கா விமானப்படை குண்டு வீச்சு விமானங்களும் வை-12, வை-08, அவ்ரோ பயணிகள் விமானங்களும் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்திய வண்ணம் உள்ளன.

இதே வேளை ஆனையிறவு இராணுவ முகாமிலுள்ள சிறிலங்கா இராணுவத்தினருக்கு உதவியாக விமானப் படையினர் தாக்குதல் நடத்தி வருவதாகவும், இராணுவத்திற்குத் தேவையானவற்றை வானிலிருந்து விநியோகிப்பதாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றனர்.

---

### இன்று

## சமுகமளிக்கவும்

(யாழ்ப்பாணம்)

யூனிவேர்சல் கல்வி நிறுவன ஆண்டு 10, 11 இல் கல்விகற்கும் சகல ஆண் மாணவர்களையும் இன்று காலை 9 மணிக்கு தேனீக்களின் நிர்வாக செயலகத்திற்கு சமூகமளிக்கும்படி நிர்வாக இயக்குனர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## ஹெலி தாக்குதல்

(கன்னாகம்)

ஏழாலை, கட்டுவன், தெல்லிப்பளைப் பகுதிகளில் இன்று அதிகாலை 3.00 மணியளவில் உலங்குவானூர்தித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

---

மினிக்கச்சேரிகளாக

நியமனம் செய்யப்படுவார் என்றும் இவருக்கு முழு அதிகாரங்களும் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

சீருடையில்

வார்.

இங்குள்ள பகுதிகளில் இராணுவ சீருடையுடன் ஆயுதம் தரித்துச் செல்வோர் அங்கு கொள்ளையடிக்கின்றனர் என்றும் இதனை நீக்க உடனடியாக பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் செல்லச்சாமி சிறிலங்காவின் பாதுகாப்பு இணை அமைச்சரும் பிரதமருமாகிய டி. பி விஜய துங்காவிடம் கேட்டுள்ளார்.

---

தென்மராட்சி

வேளையில் அதிர்ந்தன. இதனைத் தொடர்ந்து தென்மராட்சிப்பகுதி பதட்ட நிலைக்குள்ளாகியது. (லோ)

---

மேஜர்

தெரிவிக்கின்றன.

ஆனால் இச்சண்டையில் மரணமடைந்த இராணுவத்தினரின் தொகை இதைவிட அதிகமெனவும் காயமடைந்தவர்கள் தொகை இதைப் போன்று சிலமடங்குகள் அதிகமாகவுள்ளது எனவும் அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

---

### தனுவின் சடலம்

## இரகசிய இடத்தில் அடக்கம்

(சென்னை)

ராஜீவ் காந்தியின் மரணத்தோடு தொடர்புள்ளவராகக் கருதப்படும் தனு என்ற பெண்ணின் சடலம் ரகசிய இடத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளதாக இந்திய புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது

சிறிபெரும்புதூர் குண்டு வெடிப்பில் உடல் சிதறிய தனுவின் முகப்பகுதி பாதிக்கப்படாமல் கண்டு எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது அவரின் சிதறிய உடலை ஒன்று சேர்த்து கெட்டுப்போகாமல் இரசாயன மருந்திட்டு வைத்திருந்தனர்;

தேவை ஏற்படின் மீண்டும் தோண்டி எடுப்பதற்காகவே தனுவின் பூதவுடல் இரகசியமான இடத்தில் புதைக்கப்பட்டுள்ளதாக சி. பி. ஐ தெரிவித்தது.

## அமைச்சரின் வீட்டின் மீது தீவிரவாதிகள் தாக்குதல்

மத்திய உள்துறை அமைச்சர் எஸ் பி. சவானின் மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள வீடு சீக்கியத்தீவிரவாதிகளால் தாக்கப்பட்டுள்ளது. இத்தாக்குதலில் எஸ் பி. சவானின் மகள் உயிர் தப்பியுள்ளார். சீக்கியப் போராளிகள் மகாராஷ்டிரா மநிலத்தில் தாக்குதல் நடத்தியிருப்பது மாநில அரசை அதிர்ச்சியடையவைத்துள்ளது.

### கொழும்பின் பாதுகாப்பு

## தமிழ்க் குழுக்களுடன் ரணதுங்கா ஆலோசனை

(கொழும்பு)

கொழும்பு நகரின் பாதுகாப்புக் குறித்து தமிழ்க்குழுக்களின் பிரதிநிதிகள் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்காவைச் சந்தித்து பேச்சு நடத்தினர்.

நேற்றுக் காலை 8.00 மணிக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலகத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தலைநகரில் பயங்கரவாத நடவடிக்கைகளை ஒழிப்பது பற்றியும் இதற்காக எடுக்கப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றியும் ஆராயப்பட்டதாம்.

## ஒத்திவைப்பு

யாழ் மாவட்ட இறைச்சிக் கடை வியாபாரிகள் சங்கத்தினால் இன்று நடாத்தப்படவிருந்த கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பின் போடப்பட்டுள்ளதாகப் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார். (24)

## கலந்துரையாடல்

யாழ். மாவட்ட விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் இன்று (12-07-91) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற இருப்பதால் அனைத்து விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்களையும் தவறாது சமூகம் தருமாறு வேண்டப்படுகின்றார்கள்.

---

ஒத்துழைக்க

காயமடைந்தோரை பராமரித்து உதவ விரும்புபவர்கள் ஏழு அல்லது எட்டு நாட்கள் தொடர்ந்து எங்களோடு கூடவே வந்து தங்கி நின்று பராமரிக்க தயாராக வரும்படியும், மக்கள் இரத்த தானம் செய்வதற்கு தயாராக இருக்கும்படியும், தேவைப்படும் போது உதவிகளைச் செய்வதற்கு ஆயத்தமாக இருக்கும்படியும் கேட்டுக் கொண்டார்

அத்துடன் வாகனப் போக்குவரத்து இடையூறு நேராமல் தவிர்க்கும் படியும், விபத்து நேர்வதைத் தடுக்கும்படியும் வேண்டுகோள் விடுத்தார்.

மேலும் இன்று காலை ஆறு மணிக்குப் பிறகு அவசர தேவையில்லாமல் வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம் என்றும், தேவையற்ற விடுப்புப் பேச்சுக்களை தவிர்க்கும் படியும் கோரியுள்ளார்.

---

கடலில்

நோக்கி வருவதற்காகப் பல பொதுமக்கள் காத்து நின்றனர். அப்போது அப்பகுதிக்கு வந்த இரண்டு பொம்பர்கள் இவர்களை மையமாகக் கொண்டு வட்டமிட்டன. தாக்குதல் நடக்கப்போகிறது எனக்கருதிய எட்டுப் பேர் அங்கிருந்து தப்புவதற்காகக் கடலில் குதித்தனர். இதில் கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த நவனதராஜா வயது (19) என்பவர் பலியானார். இவரது சடலம் கரை ஒதுங்கியது ஐவர் நீந்திக் கரைசேர்ந்தனர். ஏனைய இருவரது நிலை பற்றி இதுவரை தெரியவில்லை. இவர்கள் இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகின்றது (ச)

---


## மரண அறிவித்தல்

### செல்வன் திருநடராசா வதனராசா

செல்வன் திருநடராசா வதனராசா அகாலமரணமடைந்து விட்டார். இவர் திருநடராசா கனகாம்பிகை தம்பதியின் இளைய மகனும் மஞ்சுளாதேவி சண்முகலிங்கம் வஸந்தலாதேவி ஜெயந்தி காலம் சென்ற ஜெயக்குமார்-பிறேமளா ஆகியோரின் அன்புத் தம்பியும் தியாகராசா செல்வராசா செல்வரத்தினம் திருமதி சண்முகலிங்கம் ஆகியோரின் மைத்துனருமாவார்

தகனக்கிரியை 12.7.91 (இன்று) பி. ப. 4 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்தில் நடைபெறும் இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
மைத்துனர்
க. தியாகராசா

ரயில் றோட்
கொக்குவில் கிழக்கு

(R-1541)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.